TAMIL NADU STATE COOPERATIVE SOCIETIES ELECTION COMMISSION

TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## தமிழ்நாடு
## கூட்டுறவுச் சங்கங்களுக்கான
## தேர்தல்கள் – 2023

### பார்வையாளர்களுக்கான கையேடு
### (Handbook for Observers)
(துறை அலுவலர்களுக்கு மட்டும்)

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களுக்கான
## தேர்தல்கள்–2023

### பார்வையாளர்களுக்கான கையேடு

### (Handbook for Observers)

(துறை அலுவலர்களுக்கு மட்டும்)

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

## உங்களுடன்

**அன்பார்ந்த பார்வையாளர்களே,**

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 33 – A – ன் கீழ் தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஒரு சுதந்திரமான சட்டபூர்வ (Independent and statutory body) அமைப்பாகும். கூட்டுறவு சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், (Free, Fair and Transparent) சட்ட விதிகளுக்குட்பட்டும், நடத்த வேண்டியது ஆணையத்தின் சட்ட பூர்வ கடமையாகும்.

இத்தேர்தல்கள் தொடர்பாக ஆணையத்தால் 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண் 52 – A (6)-ன் கீழ் நியமனம் செய்யப்படும் பார்வையாளர்களாகிய உங்களது சட்டபூர்வ கடமையும் பொறுப்பும் மிகவும் முக்கியமானதாகும். உங்களின் பணிகள் தொடர்பாக சட்ட விதிகளில் கூறப்பட்டவற்றை தொகுத்து ஒரு கையேடாக வழங்குவது உங்களது பணியின் பொறுப்புகளையும், கடமைகளையும் நீங்கள் நன்கறிந்து செயல்பட மிகவும் உதவிடும் என்ற நோக்கில் இக்கையேடு ஆணையத்தால் வெளியிடப்படுகிறது.

பார்வையாளர்களாக நியமனம் செய்யப்படும் அரசு உயர் அலுவலர்களாகிய நீங்கள் உங்களுடைய நீண்டகால சிறப்பான நிர்வாக அனுபவத்தைக் கொண்டு, ஆணையத்தின் கண்ணும் காதுமாக செயல்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஆணையம் சிறப்பாக நிர்வகித்திட மற்றும் நடத்திட மிகவும் உதவிடுவீர்கள் என்று ஆணையம் உறுதியாக நம்புகிறது மற்றும் எதிர்பார்க்கிறது.

**வாழ்த்துகளுடன்**

நாள்: **03.02.2023**

**(தயானந்த் கட்டாரியா)**

# உள்ளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னோட்டம் | 1 |
| 2 | இந்திய தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள் – சட்ட பூர்வ நிலை | 1 |
| 3 | தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் | 2 |
| 4 | தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள் - சட்ட பூர்வ நிலை | 4 |
| 5 | தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் | 8 |
| 6 | பார்வையாளர்களின் பணிகள் | 8 |
| 7 | நிர்வாகிகள் (Office Bearers) - (தலைவர் / துணைத்தலைவர்) தேர்தல் | 26 |
| 8 | பார்வையாளர்களின் பங்களிப்பு | 26 |
| 9 | இணைப்புகள் (1 முதல் 8 வரை) | 28-50 |

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்

# தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள்

****

# பார்வையாளர்களுக்கான கையேடு

## *(Hand Book for Observers)*

### (துறை அலுவலர்களுக்கு மட்டும்)

****

## 1. முன்னோட்டம்:

*1.1.* பொதுவாக மக்களாட்சிக் கொள்கைகளின்படி செயல்பட்டு வரும் நாடுகளில் *(Democracies)* சுதந்திரமான, நியாயமான *(Free & Fair)* தேர்தல்கள் நடைபெற அந்நாட்டு தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை *(Regulating Election Management)* அந்நாடுகள் மேற்கொள்கின்றன. இவற்றில் உள்நாட்டு பார்வையாளர்கள் *(Domestic Observers)* மற்றும் ஐக்கிய நாடுகள் மற்றும் கூட்டமைப்பு நாடுகள் *(United Nations and Common Wealth Nations)* போன்ற வெளி அமைப்புகளின் *(External agencies)* பார்வையாளர்கள் பணிகளும் அடங்கும்.

## *2.* இந்திய தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள் - சட்டபூர்வநிலை

***2.1.*** இந்தியாவின் தேர்தல் நடைமுறைகளைப் பொறுத்து, தொடக்க காலங்களில், தேர்தல் பற்றிய புகார்கள் பெறப்படும் நேர்வுகளில் இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து சில அலுவலர்கள் *(some officials from the Election Commission's Head Quarters)* அப்புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க அனுப்பப்பட்டனர். பின்னர் காலம் செல்லச் செல்ல, புகார்களின் எண்ணிக்கைகள் கூடக்கூட, *1990*-ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து தேர்தல் ஆணைய பார்வையாளர்களாக *(Election Commission's Observers)* அனைத்து இந்திய மற்றும் மத்திய பணிகளைச் சேர்ந்த *(All India Services and Central Services)* அலுவலர்கள் பார்வையாளர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

***2.2.*** இந்திய தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், *1951*, (திருத்தப்பட்ட சட்டம் *1996)* பிரிவு *20-B* - ன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டபடி, இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

**பிரிவு *20-B* - கூறுவதாவது :**

*(1) The Election Commission may nominate an Observer who shall be an officer of Government to watch the conduct of election or elections in a constituency or a group of constituencies and to perform such other functions as may be entrusted to him by the Election Commission.*

*(2) The Observer nominated under sub-section (1) shall have the power to direct the returning officer for the constituency or for any of the constituencies for which he has been nominated, to stop the counting of votes at any time before the declaration of the result or not to declare the result if in the opinion of the Observer booth capturing has taken place at a large number of polling stations or at places fixed for the poll or counting of votes or any ballot papers used at a polling station or at a place fixed for the poll are unlawfully taken out of the custody of the returning officer or are accidentally or intentionally destroyed or lost or are damaged or tampered with to such an extent that the result of the poll at that polling station or place cannot ascertained.*

*(3) Where an Observer has directed the Returning Officer under this section to stop counting of votes or not to declare the result, the Observer shall forthwith report the matter to the Election Commission and thereupon the Election Commission shall, after taking all material circumstances into account, issue appropriate directions under Section 58A or Section 64A or Section 66.*

*Explanation. For the purpose of sub-section (2) and sub-section (3), "Observer" shall include a Regional Commissioner or any such officer of the Election Commission as has been assigned under this section the duty of watching the conduct of election or elections in a constituency or group of constituencies by the Commission.*

## *3.* தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

### *3.1.* அமைப்பு *(Constitution)*

***3.1.1.*** *1983*-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (சுருக்கம் கருதி இனிவரும் இடங்களில் சட்டம் எனப்படும்) பிரிவு *33-A*-ன் கீழ் தேர்தல் ஆணையர் ஒருவரை உள்ளடக்கிய தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் (சுருக்கம் கருதி இனிவரும்

இடங்களில் ஆணையம் எனப்படும்) அமைக்கப்பட்டுள்ளது. ஆணையம் ஒரு தனியான சட்டபூர்வ *(an independent statutory body)* அமைப்பாகும்.

***3.1.2.*** *1988*-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (சுருக்கம் கருதி இனிவரும் இடங்களில் விதி எனப்படும்) சட்டப்பிரிவு *33(11)(b)* மற்றும் விதிகள் *52, 52-A* மற்றும் *53*-ல் சொல்லப்பட்டபடி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஆணையம் நடத்திவருகிறது.

## ***3.2.*** சட்டம் மற்றும் விதிகளின்கீழ் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளில் முக்கியமானவை சில கீழ் வருமாறு :

***3.2.1.*** தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு *(Superintendence, Direction and Control).* கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் *(Members of the Board)* மற்றும் நிர்வாகிகள் *(Office Bearers)* தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல் *(Electoral Rolls)* தயாரித்தலும் மற்றும் அனைத்து தேர்தல் நடவடிக்கைகளும் நடைபெறுதல் வேண்டும்.

***3.2.2.*** **மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது நிர்வாக நடுவர் *(Executive Magistrate)* அல்லது எந்தவொரு காவல் அலுவலர் *(Police Officer)*, ஆகியோருக்கு, தேவையென்று கருதும் நிலையில், தேவைப்படும் கட்டளைகள் இடும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு உண்டு.**

***3.2.3*** **சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் *(Members of the board)* மற்றும் நிர்வாகிகள் *(Office bearers)* தேர்தல் தொடர்பாக, பணியாற்ற நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும், சங்கங்களின் அத்தேர்தல்களை நடத்துவதற்கும், எந்த ஒரு கட்டளையையும் வழிகாட்டுதலையும், அறிவுறுத்தல்களையும் *(Direction, Guidelines, Instructions)* வழங்கிடும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு உண்டு.**

***3.2.4.*** தேவைப்படும் நேர்வில், அலுவலர்களுக்கு தனது கட்டுப்பாடு மற்றும் சீராய்வுக்குட்பட்டு *(Control and Revision)* தனது அதிகாரங்களை தேர்தல் ஆணையம் வழங்கலாம்.

## ***3.3.*** மாநிலத் தேர்தல் அலுவலர் *(State Election Officer)*

***3.3.1.*** சட்டம் பிரிவு *3*-ன் கீழ் அரசால் பதிவாளர்களாக *(Registrars)* நியமிக்கப்பட்ட அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, விதி எண் *52 – A (3)*ன் கீழ் மாநிலத் தேர்தல் அலுவலர்களாக ஆணையம் நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட மாநிலத் தேர்தல் அலுவலர்கள், தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு அவர்களின்

நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு ஒருங்கிணைந்து மேற்பார்வையிடல் *(Coordinate and Supervise)* வேண்டும். தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பணிகளையும் அவர்கள் செய்து வரவேண்டும்.

### *3.4.* மாவட்ட தேர்தல் அலுவலர்கள் *(District Election Officers)*

***3.4.1.*** கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் பணிநிலைக்குக் குறையாத நிலையிலுள்ள கூட்டுறவுத்துறை அலுவலர்கள் அல்லது அப்பணிநிலைக்குக் குறையாத பணியிலுள்ள இதர அரசு துறையைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோரை மாவட்ட தேர்தல் அலுவலராக தேர்தல் ஆணையம் நியமிக்கலாம். அவர்கள் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டபடி, அவர்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட சங்கங்களின், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல், நிர்வாகக்குழு மற்றும் நிர்வாகிகளுக்கான தேர்தல்கள் நடத்துதல் போன்றவற்றை ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் வேண்டும் *(Coordinate and supervise)*. தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பணிகளையும் அவர்கள் செய்து வரவேண்டும்.

### *3.5.* அயல்பணி *(On Deputation)*

***3.5.1.*** மாவட்ட தேர்தல் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் *(Electoral Officer)*. தேர்தல் அலுவலர்கள், வாக்குப் பதிவு அலுவலர்கள், விதிகளின்கீழ் நியமிக்கப்பட்ட இதர அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு அரசால் தேர்தல் நடத்துவதற்காக குறிக்கப்பட்ட காலத்திற்கு நியமிக்கப்பட்ட *(Designated)* எந்தவொரு காவல் அதிகாரி ஆகியோர், தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் *(Electoral Rolls)* தயாரிக்கும் நாளிலிருந்து அது முடியும் வரையிலும் மற்றும் தேர்தல் அறிவிப்பு நாளிலிருந்து *(Notification calling for such Election)* அத்தேர்தல் முடியும் நாள் வரையும் விதி எண் *52 - A (5)*ல் கூறப்பட்டுள்ளபடி **தேர்தல் ஆணையத்திற்கு அயற்பணிக்கு அனுப்பபட்டவர்களாகக் கருதப்படுவர். இந்த அலுவலர்கள் அக்கால அளவில் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் நெறிப்படுத்துதல் *(Control, Superintendence, discipline)* ஆகியவற்றிற்கு உட்பட்டவராவர்.**

## *4.* தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள் - சட்ட பூர்வ நிலை

***4.1.*** விதி எண்.*52-A (6)*-ன்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டபடி கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் **பார்வையாளரை *(Observer)*** ஆணையம் நியமிக்கிறது. இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட

**பார்வையாளர்** அவ்விதியில் கூறப்பட்டபடியான கடமைகளையும், பொறுப்புகளையும் கொண்டவராவார்.

### *4.2* விதி *52-A (6)* கூறுவதாவது :

*a) The Election Commission may nominate an Observer, who shall be an officer of the Government to watch the conduct of election or elections to a co-operative society or a group of cooperative societies within a District or a Revenue Division or a part of a Revenue Division and to perform such other functions as may be entrusted to him by the Election Commission.*

*b) The Observer nominated under clause (a), shall have the power to direct the Election Officers concerned, to stop the counting of votes at any time before the declaration of the result or not to declare the results, if in the opinion of the Observer, booth capturing has taken place at a large number of polling stations or at places fixed for the poll or counting of votes or any ballot papers used at a polling stations or at places fixed for the poll are unlawfully taken out of the custody of the Election Officer or if at any time before the counting of the votes is completed, ballot papers used at a polling station are unlawfully taken out of the custody of the Election Officer or are accidentally or intentionally destroyed or lost or are damaged or tampered with to such an extent that the result of the poll at that polling station or place cannot be ascertained.*

*c) Where an observer has directed the Election Officer under this rule to stop counting of votes or not to declare the result, the Observer shall forthwith report the matter to the District Election Officer, State Election Officer and the Election Commission and thereupon, the Election Commission shall, after taking all material circumstances into account, issue appropriate directions as may deem proper for the further conduct and completion of the election.*

*Explanation : - For the purpose of this sub-rule, "Observer" shall include any officer of the Election Commission as has been assigned under this rule the duty of watching conduct of election or elections to a cooperative society or a group of cooperative societies within a District or a Revenue Division or a part of a Revenue Division.*

**4.3. பார்வையாளர் நியமனம் பற்றிய விதி 52-A(6)-ல் உள்ளபடி மேலே தரப்பட்டுள்ளது. இதனுடைய தமிழ் வடிவம் தனியே (இணைப்பு-1)-ல் தரப்பட்டுள்ளது. பத்தி 2.2-ல்**

**சொல்லப்பட்ட இந்திய தேர்தல் ஆணைய பார்வையாளர்களின் கடமை, பொறுப்புகள் பற்றிய மக்கள் பிரதி நிதித்துவச் சட்டம் பிரிவு எண்.*20-B* ல் என்ன கூறப்பட்டுள்ளதோ அதுவே வரி பிறழாமல் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க தேர்தல் பார்வையாளர்களுக்கான கடமைகளும் பொறுப்புகளும் பற்றிய விதி எண்.*52-A (6)*லும் கூறப்பட்டுள்ளது என்பதை ஒப்பு நோக்கலாம்.**

***4.4.*** தவிரவும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் அதன் அதிகாரங்கள் பற்றி கூறப்பட்டுள்ளவற்றில் பெரும்பாலானவை அவற்றில் உள்ளபடியே, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் அலுவலர்கள் ஆகியோரின் கடமையும், பொறுப்பும், அதிகாரமும் பற்றி கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டுள்ளதென்பதையும் ஒப்பு நோக்கலாம்.

***4.5.*** இவ்வகையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களும், பாராளுமன்ற சட்டமன்ற தேர்தல்களை போன்ற வகையில் மிகவும் முக்கியமானதாகவும், மிகப் பொறுப்புடனும் கடமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் நடத்தப்பட வேண்டியதாகும் என தமிழக அரசு மற்றும் சட்ட வடிவமைப்பாளர்கள் *(Legal Architects)* கருதியே தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பான சட்டமும் விதிகளும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 -ஒட்டியே உருவாக்கப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

***4.6.*** இருப்பினும் பாராளுமன்ற சட்டமன்ற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடவடிக்கைகளும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடவடிக்கைகளும் சில நேர்வுகளில் மாறுபட்டனவாகும்.

*4.6.1.* கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களைப் பொறுத்தவரை தேர்தல் அறிவிப்பு *(Notification)* முதல் சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் வரை 17 தேர்தல் நடவடிக்கைகள் உள்ளன. இவற்றில் வாக்காளர் பட்டியல் அலுவலர் *(Electoral Officer)* என்ற வகையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தேர்தல் நடவடிக்கைகளின் மிக முக்கியமான அடிப்படை பணியாகும். மற்றவை தேர்தல் அலுவலரால் *(Election Officers)* மேற்கொள்ளப்படுகின்றன. தேர்தல் அலுவலராக நியமிக்கப்படும் அலுவலர் அரசு அலுவலராக மட்டுமே இருக்க வேண்டும் என்று விதிகளில் கூறப்படவில்லை. ஆயின் அரசு அலுவலர் மட்டுமே வாக்காளர் பட்டியல் அலுவலராக நியமிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் அலுவலர் என்ற பதவி மற்றும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் வாக்காளர் பட்டியல் அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டிய தேர்தல் நடவடிக்கை போன்றவை பாராளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடவடிக்கைகளின் பகுதியாக இல்லை. ஏனெனில் இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் அவ்வப்போது இறுதி *(final)* செய்யப்படும் வாக்காளர் பட்டியலே அதாவது 18 வயது அடைந்த அனைவரையும் உள்ளடக்கிய பட்டியலே

இத்தேர்தல்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றிற்கான தனித்தனி வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்படுவதில்லை. கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களைப் பொறுத்த வரையில் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் அனைவருமே சங்கத் தேர்தல்களில் வாக்களிக்க தகுதிப் பெற்றவராக கருதப்படமாட்டார். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் அச்சங்கத்தின் தேர்தல் நடவடிக்கையின் வாக்குப்பதிவு நாளுக்கு *30* நாட்களுக்கு முன்னர் சட்டவிதி மற்றும் சங்கத்துணை விதிப்படி வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவர். மேலும் வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் சின்னங்கள் *(Symbols)* இருக்காது. வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்கள் *(Numbers)* மட்டுமே இருக்கும். தவிரவும் பொது தேர்தல் வாக்குச் சீட்டில், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய வேட்பாளர் என்ற முறையில், ஒரு நபருக்கான சின்னத்தில் முத்திரையிட்டால் *(affixing the seal)* போதுமானது. ஆயின் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களில் சங்கத்தின் வகையினை பொறுத்து *(Primary, Central, Apex)* ஒரே வாக்குச் சீட்டில், *7* முதல் *21* நபர்கள் வரையிலான எண்ணிக்கைக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்களுக்கெதிரே முத்திரை *(affixing the seal)* இடவேண்டும்.

***4.7*** எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களின் கூடுதல் தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் மாறுபட்ட ஓட்டு சீட்டு மற்றும் வாக்களிப்பு போன்ற தனித்தன்மைகளை நன்கறிந்து, அவற்றைச் சிறந்த முறையில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், விருப்பு வெறுப்பின்றியும், இது தொடர்பான சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளபடி எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றியும் இச்சட்டபூர்வ கட்டளையினை எவ்விதக் குறையுமின்றி, சீராகவும், சிறப்பாகவும் ஆணையம் நடத்திட **பார்வையாளர்களின் பணியும் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.**

***4.8.*** **பார்வையாளர்களாக** நியமனம் செய்யப்படும் அரசு உயர் அலுவலர்கள் தங்களுடைய நீண்டகால நிர்வாக அனுபவத்தைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஆணையம் சிறப்பாக நிர்வகித்திட மற்றும் நடத்திட மிகவும் உதவிடுவார்கள் என்றும் *(in the process of efficient and effective management of the electoral process at the field level)*, ஆணையத்தின் கண்ணும் காதுமாக *(eyes and ears of the Commission)* அவர்கள் செயல்பட்டு, தேவைப்படும் இனங்களில் உடனுக்குடன் உரிய விபரங்களைத் தெரிவித்து ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க உதவிடுவார்கள் என்றும் ஆணையம் உறுதியாக நம்புகிறது மற்றும் எதிர்பார்க்கிறது.

## *5*. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள்

***5.1***. தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் *(Registrar of Co-operative Societies)* மற்றும் *14* செயற்பதிவாளர்களின் *(Functional Registrars)* நிர்வாகக்கட்டுப்பாட்டின் கீழ் *23,149* சங்கங்கள் **(இணைப்பு - *2*)** உள்ளன.

***5.2***. இவற்றின் நிர்வாகக்குழுவிற்கு சுமார் *2* லட்சத்திற்கும் அதிகமான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் *(Vacancies)* சுமார் *2* கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களால் (வாக்காளர்களால்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். **இவ்வகையில் தமிழ்நாட்டின் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் ஒரு மாபெரும் நிகழ்வாகும். இப்பணியில் ஈடுபடும் அனைவரும் மிக்க கவனத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயல்படுவது மிக அவசியமானதாகும். இதனை உறுதிப்படுத்துவது *(ensure)* பார்வையாளர்களின் மாபெரும் கடமையும் பொறுப்புமாகும்.**

## *6*. பார்வையாளர்களின் பணிகள் *(Role of observers)*

***6.1***. விதி எண் *52-A(6)(b)*-ல் பார்வையாளரின் சட்டபூர்வ அதிகாரம் பற்றிக் கூறப்பட்டிருப்பினும், அத்துடன், **விதி எண்.*52-A (6)(a)* ல் கூறப்பட்டுள்ளபடி கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் நடைபெறுவதை கண்காணித்தல் *(to watch the conduct of elections)* மற்றும் ஆணையத்தால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர செயல்பாடுகளை செயல்படுத்துதல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆரம்பம் முதல் இறுதி வரை சட்டவிதிப்படி முறையாக மேற்கொள்ளப்படுதலை உறுதி செய்ய வேண்டியது பார்வையாளர்களின் தலையாய கடமையாகும் என்று ஆணையம் கருதுகிறது. அவ்வகையில் அவர்களது பணியினை திறமையாக மேற்கொள்ள ஆணையம் விரும்புகிறது.**

***6.2***. கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள், தேர்தல் அறிவிப்பு *(Election Notification)* என்ற முதல் நடவடிக்கையிலிருந்து தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் வரை மொத்தம் *17* நடவடிக்கைகளை **(இணைப்பு - *3*)** உள்ளடக்கியதாகும். இவை அனைத்துமே ஒவ்வொரு வகையிலும் முக்கியமானதும் தனித்தன்மை வாய்ந்ததும், சிறப்புக் கவனம் மேற்கொள்ளப்பட வேண்டியதும் ஆகும். **பார்வையாளர்கள்** தங்களுக்கு ஒதுக்கீடு *(Allot)* செய்யப்பட்ட சங்கம் அல்லது சங்கங்களின் தொகுப்புகளுக்கான *(Election to a Cooperative Society or a group of Cooperative Societies)* **தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்தும் பணிகளில் ஈடுபடுவதற்கு முன்னர் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடவடிக்கைகளைப் பற்றிய**

**ஒரு முழுமையான தெளிவு மற்றும் புரிதல் மிக அவசியமானதாகும் *(Complete knowledge and understanding)*.**

***6.3.*** நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று முறையே விதி எண்.52 மற்றும் 53-ல் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக ஆணையம் அடியிற்கண்ட கையேடுகளை வெளியிட்டுள்ளது.

1) தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு
2) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு - 1 (வேட்பு மனுக்கள்)
3) வாக்காளர் பட்டியல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு - 2 (வாக்காளர் பட்டியல்)
4) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு - 3 (வாக்குப்பதிவு)
5) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு - 4 (வாக்கு எண்ணுகை)
6) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு- 5 (தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்)
7) வேட்பாளர்களுக்கான துணைக் கையேடு (வேட்பாளர் கையேடு)
8) அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொகுப்பு – தொகுதி – 1
9) அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொகுப்பு – தொகுதி – 2
10) அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொகுப்பு – தொகுதி – 3

***6.4.*** இவற்றினை ஆணையத்தின் வலைத்தளத்திலும் (www.coopelection.tn.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்தகைய கையேடுகளில் கூறப்பட்டுள்ளவற்றை முழுமையாக அறிந்து கொள்வது **பார்வையாளர்கள்** தங்களது பணிகளை செவ்வனே ஆற்றிட மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**6.5 கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் இணைப்பு - 3-ல் கண்டுள்ளபடி அடியிற்குறிப்பிட்டவாறு வகைப்படுத்தலாம்.**

| வ.எண் | தேர்தல் நடவடிக்கை எண் | தேர்தல் நடவடிக்கை வகை |
|---|---|---|
| 1 | 1 | தேர்தல் அறிவிப்பு |
| 2 | 2 முதல் 8 வரை | வாக்காளர் பட்டியல் |
| 3 | 9 முதல் 13 வரை | வேட்புமனு (தாக்கல், பரிசீலனை, திரும்பப் பெறுதல், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்) |
| 4 | 14 | வாக்குப்பதிவு |
| 5 | 15 | ஓட்டு எண்ணுகை, முடிவு அறிவித்தல் |
| 6 | 16 மற்றும் 17 | தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் |

***6.5.1.*** மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகள் பொதுவாக எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை **பார்வையாளர்கள்** நன்கு அறிந்து கொள்வது அவர்களது மேற்பார்வைப் பணியினை செவ்வனே நிறைவேற்றிட மிகவும் உறுதுணையாக இருக்கும் என ஆணையம் கருதுகிறது.

## *6.6.* தேர்தல் அறிவிப்பு *(Notification)*

***6.6.1.*** ஆணையத்தால் சங்கத் தேர்தலுக்கான தேர்தல் திட்டம் வழங்கப்பட்டவுடன் அதனை வாக்குப்பதிவு நாளுக்கு *30* நாட்களுக்கு முன்னர் *(30 days prior to the date of poll)* சங்க உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு வாக்குப்பதிவுக்கு *15* நாட்களுக்கு முன்னதாக *(15 days prior to the date of poll)* விதி எண்.*52(6)(b)*-ல் சொல்லப்பட்ட வகையில் தேர்தல் அறிவிப்பு *(Notification)* அனுப்பப்பட்டுள்ளதா? என்பதை பார்வையிட வேண்டும்.

## *6.7.* உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், கோருரிமை மற்றும் மறுப்பு தெரிவித்தல், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல்:- (விதி எண்.*52 (7)* மற்றும் *52 (7-A)*)

***6.7.1.***எந்த ஒரு தேர்தலிலும் முக்கியமான ஆவணம் அத்தேர்தலில் வாக்களிக்க உரிமை உள்ளவர்கள் பற்றிய ஆவணமே ஆகும். கூட்டுறவுச் சங்க தேர்தலைப் பொறுத்த வரை சங்கத்தின் உறுப்பினர்கள் *(Members)* அனைவரும் சங்கத் தேர்தலில் வாக்களிக்க உரிமை உள்ளவர்கள் ஆவர் என்று கூற இயலாது. அச்சங்கத்தின் தேர்தலில் அச்சங்க துணைவிதிகளில் கூறப்பட்டுள்ள சில நிபந்தனைகளின் அடிப்படையில் தகுதியுள்ளவர் மட்டுமே வாக்களிக்கத் தகுதி உள்ளவர்களாவர். விதி *52(7)*–ல் சொல்லப்பட்டபடி வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய *30*வது நாளில் சங்க உறுப்பினர்களாக உள்ள *(On the date thirty days prior to the date of poll)* மற்றும் கூட்டுறவுச் சட்டம், விதிகள் மற்றும் சங்கத் துணைவிதிப்படி *(*சங்கத்தின் செயல்பாடு/வகையினைப் பொறுத்து ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒவ்வொரு வகையில் துணைவிதி இருக்கலாம்*)* சங்கத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களின் பட்டியலைத் தயாரித்து (தொகுதி இருப்பின் தொகுதி வாரியாக*)*, அதனை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடுவதுடன் அதன் மூன்று பிரதிகளை சங்கத்திற்கான வாக்காளர் பட்டியல் அலுவலரிடம் *(Electoral Officer)* வழங்க வேண்டும். வாக்காளர் பட்டியல் அலுவலர் அதனை சரிபார்த்து சட்டம், விதிகள் மற்றும் துணைவிதிப்படி வாக்களிக்க தகுதி உள்ள உறுப்பினர்கள் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

***6.7.2.*** வாக்காளர் பட்டியல் அலுவலரால் சரிபார்க்கப்பட்ட சங்க உறுப்பினர் பட்டியலே பின்னர் வாக்காளர் பட்டியல் என்று அழைக்கப்படுகிறது. இந்த வாக்காளர் பட்டியலை, வாக்காளர் பட்டியல் அலுவலர், சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் *(Notice Board)* தேர்தல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நாளில் வெளியிட வேண்டும். இப்பட்டியல் மீது கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் ஏதும் இருப்பின், தேவையான இனங்களில் உரிய விசாரணை மேற்கொண்டு *(after making such enquiry as he considers necessary)*, திருத்தங்கள் இருப்பின் திருத்தங்களை மேற்கொண்டு, திருத்தங்களுடனான இறுதி வாக்காளர் பட்டியலை சங்க அலுவலகத்தில் உள்ள தகவல் பலகையில் வெளியிட வேண்டும்.

***6.7.3.***போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்காளர் பட்டியல்கள் வழங்கப்படும் நிலையில் வாக்காளர் பட்டியல் அலுவலரால் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின் உண்மையான பிரதிகளே வழங்கப்படுகின்றன என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

***6.7.4.***தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டபடி வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு உரிய நாட்களுக்குள் உறுப்பினர் பட்டியல், வழங்கப்பட்டது குறித்தும், வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியல் தயாரித்து அதனை சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் வெளியிட வேண்டிய நாளில் வெளியிடுதலையும் **பார்வையாளர்கள்** பார்வையிடுதல் அவசியமானதாகும்.

***6.7.5.*** விதி எண் *52 (8) (a)* – ன் படி வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய தகுதி உள்ளவர்களாவர் என்ற நிலையில் வாக்காளர் பட்டியல் அலுவலரால் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் தேர்தல் அலுவலரிடம் இருப்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

***6.7.6.*** தனது செயல் எல்லையில் *(Observer Jurisdiction)* உள்ள அனைத்து சங்கங்களின் வேட்பு மனுத்தாக்கல் நடவடிக்கையின் போதும் **பார்வையாளர்** நேரடியாக இருந்து நடவடிக்கைகளைப் பார்வையிட இயலாதென்ற போதிலும், பெரும்பான்மையான சங்கங்களைப் பார்வையிடும் வகையில் திட்டம் வகுத்து செயல்படுவது மிகவும் முக்கியமானதாகும். தவிரவும் அடியிற் குறிப்பிட்ட சங்கங்களைப் பொறுத்து தனிக்கவனம் செலுத்துவது மிக அவசியமானதாகும்.

1) சென்ற தேர்தலின் போது பிரச்சினைகள் ஏற்பட்ட சங்கங்கள்.
2) தற்போதைய தேர்தலின் போது பிரச்சினைகள் ஏற்படலாம் என எதிர்பார்க்கக்கூடிய சங்கங்கள்
3) நேரடியாக அல்லது ஆணையத்தின் வழி புகார்கள் வரப்பெற்ற சங்கங்கள்

சங்கங்களுக்கு அடுத்து செல்லும்போது, முதல் நடவடிக்கையாக, வேட்புமனு தாக்கல் தொடர்புடைய ஆவணங்களைப் பார்வையிட்டும், தேர்தல் அலுவலரிடம் விசாரித்தறிந்தும், வேட்புமனு தாக்கல் தொடர்பான விதிகள், ஆணைய சுற்றறிக்கைகள் மற்றும் நீதிமன்ற அறிவுரைகள்படி எவ்வித புகாருக்கு இடமின்றி தேர்தல் அலுவலர் வேட்புமனு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்பதை உறுதி செய்திடல் வேண்டும்.

***6.7.7.*** சங்க உறுப்பினர் பட்டியல் வெளியிடுதல், வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு அதனை வழங்குதல், வாக்காளர் பட்டியல் அலுவலர் அதனை சரிபார்த்து, சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடுதல், வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு *(Claim and objection)* தெரிவித்தல், அதன் மீதான தனது முடிவுகளை வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடுதல், வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் ஆகிய அனைத்திற்குமான நாட்கள் *(Dates)* தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்ட தினங்களாக மட்டுமே இருக்க வேண்டும். அறிவிக்கப்பட்ட கூட்டுறவு சங்கத் தேர்தல் நடவடிக்கைகள் *17*-ல் வரிசை எண். *2* முதல் *8* வரை வாக்காளர் பட்டியல் தொடர்பானதாகவே இருப்பதைக் காணலாம். வாக்காளர் பட்டியல் தொடர்பான நடவடிக்கைகளே சங்கத்தின் தேர்தலை முறையாக நடத்தி முடிப்பதற்கான அடிப்படையாகும்.

***6.7.8.*** வாக்காளர் பட்டியல் வெளியிடுவது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றநீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக் குழுக்கள், ஆகியவற்றின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகளிலும் வாக்காளர் பட்டியல் முறையாகத் தயாரிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டும், வாக்காளர் பட்டியல் அலுவலரின் நடவடிக்கைகள் சட்ட விதிகளுக்கு மாறாக உள்ளன என்றும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, தேர்தல்கள் ரத்து செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பது இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

**6.7.9. வாக்காளர் பட்டியல் வெளியிடுவது தொடர்பாக கூறப்பட்ட புகார்களில் மிக முக்கியமானவை வருமாறு:-**

1) உறுப்பினர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
2) வாக்காளர் பட்டியல் அலுவலர் வரவில்லை.
3) உறுப்பினர் பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படவில்லை.
4) போலியான மற்றும் தகுதியற்ற உறுப்பினர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

5) கோருரிமை மற்றும் மறுப்புகள் பெறப்படவில்லை. பெறப்பட்ட இனங்களின் மீதும் சரியான முடிவெடுக்கவில்லை.

6) இறுதி வாக்காளர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.

7) உறுப்பினர் பட்டியலில் பெயர் விடுதல்.

8) இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை.

9) சங்க செயல் எல்லை (*area of operation*) யில் வசிக்காத / தொழில் செய்யாத / விவசாய நிலம் இல்லாத உறுப்பினர்கள் சங்கத்துணைவிதிக்கு புறம்பாக உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

***6.7.10.*** கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடவடிக்கைகளின் ஒட்டு மொத்த வெற்றியின் (*Total Success*) அடிப்படையே சரியான வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடுதல்தான் என்றுள்ள நிலையில் எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றி இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை **பார்வையாளர்கள்** அவ்வப்போது கண்காணித்து தக்க நடவடிக்கை எடுத்தல் மிக அவசியமானதாகும்.

### *6.8.* வேட்புமனு (விதி எண். *52(8)* மற்றும் *52(9)* )

***6.8.1.*** வாக்காளர் பட்டியலுக்கு அடுத்ததாக, முக்கியமானதாக வேட்புமனு தொடர்பான நடவடிக்கைகள் உள்ளன.

***6.8.2.*** தேர்தல் திட்ட அறிவிப்பு நடவடிக்கை வ.எண். *9* முதல் *13* வரை கூறப்பட்டுள்ள வேட்பு மனு தாக்கல், பரிசீலனை, செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல், திரும்பப் பெறுதல் மற்றும் போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடுதல் என அனைத்து நடவடிக்கைகளுமே மிகமுக்கியமானதும் உணர்வுபூர்வமான (*highly sensitive issue*) நடவடிக்கைகளாகவும் உள்ளன. எனவே **பார்வையாளர்கள்** இந்நடவடிக்கை தொடர்பான பணிகளில் மிககவனத்துடனும், எச்சரிக்கையுடனும், செயல்படுதல் மிக மிக அவசியமானதாகும்.

### *6.9.* வேட்புமனு தாக்கல்

***6.9.1.*** வேட்புமனு தாக்கலின்போது தேர்தல் அலுவலர் கண்டிப்பாக அடியிற்காணும் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்:-

1) வேட்புமனு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளின் போதும் தேர்தல் அலுவலர் அறிவிக்கப்பட்ட நாட்களில், இடங்களில், நேரங்களில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். அறிவிப்பில் குறிப்பிட்ட நேரங்கள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

2) வேட்பு மனுவானது படிவம் 18-ல் வழங்கப்படுதல் வேண்டும். அதற்கென குறிப்பிட்ட நாள் மற்றும் நேரம் வரை வழங்கப்பட வேண்டும்.

3) போதிய எண்ணிக்கையில் (Sufficient numbers) படிவம் 18- தேர்தல் அலுவலரிடம் இருத்தல் வேண்டும்.

4) வேட்பாளர்கள் தேர்தல் அலுவலரிடமிருந்து மட்டுமே படிவம் 18 பெற வேண்டிய அவசியம் இல்லை.

5) வேட்புமனு தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற எவ்வகையிலும் இருக்கலாம். அவை படிவம் 18-ன்படி இருத்தல் அவசியம்.

6) கூடுமானவரை வேட்புமனு பெறும் பொழுதே அவற்றில் சிறுவிடுதல்கள், தவறுகள் இருப்பின் அவற்றினைச் சரிசெய்து பெற்றிடல் வேண்டும். தேர்தல் அலுவலர் தனதளவில் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.

7) வேட்புமனு பெறும்பொழுது வேட்புமனுவில் வரிசை எண் நேரம், நாள் ஆகியவற்றை தேர்தல் அலுவலர் குறிப்பிட்டு தேதியுடன் கூடிய தனது சுருக்கொப்பத்தை இடவேண்டும்.

8) வேட்புமனுவினைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டு தேர்தல் அலுவலர் வழங்கிட வேண்டும்.

9) கூட்ட நெரிசலைத் தவிர்த்திட வேட்பு மனுத்தாக்கல் செய்பவர் உள்ளிட்ட ஐந்து நபர்களுக்குமேல் அனுமதிக்கக் கூடாது.

**6.9.2.** தேர்தல் அலுவலர் மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளை தவறாது மேற்கொள்வதை **பார்வையாளர்கள்** உறுதி செய்திடல் வேண்டும். தவிரவும் வேட்பு மனுத்தாக்கல் நடவடிக்கைகளை (Nomination process) பரிசீலித்து அந்நடவடிக்கை தொடர்பாக புகார்கள் இருப்பின் அதனை முறையாக விசாரித்தல் வேண்டும். (Proper investigation).

**6.9.3.** வேட்பு மனுத்தாக்கல் நடவடிக்கைகள் போது தேர்தல் அலுவலர்கள் தேர்தல் அறிவிப்பின்படி இல்லாதது மற்றும் சட்ட விதிகள்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும்

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பெற்ற மாண்புமிகு ஓய்வுபெற்ற நீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் தேர்தல் அலுவலர்களின் நடவடிக்கைகள் மிகக்கடுமையாக விமர்சிக்கப்பட்டு தேர்தல்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பதனைக் கருத்திற் கொண்டு இம்மாதிரியான புகார்களுக்கு இடம் தராது தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை **பார்வையாளர்கள்** உறுதி செய்ய வேண்டும்.

***6.9.4.*** வேட்புமனு தாக்கல் நடவடிக்கை தொடர்பாக கூறப்பட்ட புகார்களில் மிக முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன :

1) வேட்புமனு நடவடிக்கைக்கான தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பின்படியான நாளில், இடத்தில், நேரத்தில் இல்லை.
2) வேட்புமனு படிவம் *(Form No.18)* தர மறுப்பு.
3) குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே வேட்பு மனு வழங்கப்பட்டது.
4) தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற வகைகளில் உள்ள படிவம்-18 ஏற்க மறுப்பு.
5) வேட்புமனு பெற மறுப்பு.
6) குறிப்பிட்ட நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்பட்டன.
7) வேட்பு மனுத்தாக்கலுக்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை.
8) வேட்பு மனுதாக்கலுக்கு குறிப்பிட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.
9) காவல்துறை பாதுகாப்பு போதுமான அளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.
10) வேட்பு மனு தாக்கலின் போது உண்மை நிலவரத்திற்கு மாறாக *(Contrary to facts and circumstances)* சட்ட ஒழுங்கினைக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல்.

## ***6.10.*** வேட்புமனு பரிசீலனை ***(Scrutiny)***, திரும்பப் பெறுதல் ***(withdrawal)*** இறுதி பட்டியல் ***(Final list)*** வெளியிடுதல்.

***6.10.1.*** தேர்தல் அலுவலர்கள் வேட்பு மனுக்கள் பரிசீலனை *(Scrutiny of nomination)* மற்றும் அவற்றை மீளப்பெறும் *(Withdrawal)* நடவடிக்கையின் போது அவற்றைப் பார்வையிடுதல் *(Observing)* மற்றும் அந்த நடவடிக்கைகளில் தவறுகள் இருப்பின் அதனை ஆணையத்திற்கு உடனடியாக தெரிவித்தலும் மிகவும் அவசியமானதாகும்.

**6.10.2.** இந்த நடவடிக்கைகளின் போது தேர்தல் அலுவலர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் விதிஎண்.52(8)-ல் கூறப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை:-

(1) தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நாள், நேரம் மற்றும் இடத்தில் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். பரிசீலனையின்போது மறுப்புகள் ஏதேனும் தெரிவிக்கப்படும் நிலையில் அதனை பரிசீலித்து முடிவினை எழுத்து மூலமாக *(in writing)* பதிவு செய்தல் வேண்டும். வேட்புமனுக்கள் தொடர்பாக தெரிவிக்கப்படும் மறுப்புகள் மீதோ, அல்லது தாமாகவோ *(own motion)*, தேவையென்று கருதினால் அதனை விசாரித்து, கீழ்வரும் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் *(grounds)* எந்த ஒரு வேட்பு மனுவினையும் தள்ளுபடி *(reject)* செய்யலாம்:

*i.* வேட்பு மனு தாக்கலுக்காக நிர்ணயிக்கப்பட்ட நாளன்று வேட்பாளர் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் போட்டியிடும் இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படத் தகுதி இல்லாதவராகவோ, *(not qualified)* அல்லது தகுதி இழந்தவராகவோ *(Disqualified)* இருந்தால்;

*ii.* உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தால்;

*iii.* தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் காணப்படும் வேட்பாளர், முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் ஆகியோரின் கையொப்பங்களில் ஏதேனும் ஒன்று உண்மையாக *(genuine)* இல்லாமல் இருந்தால்;

*iv.* பட்டியல்இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான ஒதுக்கப்பட்ட இடத்திற்கு போட்டியிடும் வேட்பாளர் அவ்வாறு ஒதுக்கப்பட்ட வகையைச் சாராதவராக இருந்தால்;

(2) வேட்பாளர், அல்லது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் ஆகியோரின் அடையாளம் குறித்து சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்கப்படும் நிலையில் வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர் மற்றும் விபரங்களில் காணப்படும் சிறிய தவறுகள் அடிப்படையில் மட்டும் அந்த வேட்புமனுவினை தள்ளுபடி செய்தல் கூடாது.

(3) வேட்பாளர்களின் அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு, வேட்பாளராக அவர்களைச் சேர்த்திருப்பது முறையானதுதான் என்று அறிந்து கொள்ளும் வகையில், வேட்பாளர்களுக்கோ அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர்களுக்கோ, நியாயமான அனைத்து உதவிகளையும் தேர்தல் அலுவலர் வழங்கிட வேண்டும்.

*(4)* தேர்தல் அலுவலர் ஒவ்வொரு வேட்புமனுவிலும், அதனை அவர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது தள்ளுபடி செய்கிறாரா என்ற முடிவினை பதிவு செய்வதுடன் வேட்புமனு தள்ளுபடி செய்யப்படுவதானால், அதற்கான காரணங்களைச் சுருக்கமாக எழுத்து மூலம் அதில் பதிவு *(record)* செய்ய வேண்டும்.

***6.10.3.*** வேட்பு மனுக்கள் பரிசீலனை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மாண்புமிகு ஓய்வுபெற்ற நீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்ட சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் தேர்தல்களை ரத்து செய்தும், தேர்தல் அலுவலர்கள் நடவடிக்கை தொடர்பாக கடுமையாக விமர்சனம் செய்தும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

***6.10.4.*** எனவே ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள கையேடுகள் மற்றும் சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும் பொதுவாக தேர்தல் அலுவலர்களின் வேட்புமனு பரிசீலனை நடவடிக்கைகள் சட்டவிதிகளின்படியும் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.

***6.10.5.*** **வேட்புமனு பரிசீலனை தொடர்பாக பல்வேறு புகார் மனுக்கள் ஆணையத்தால் பெறப்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமான புகார்கள் பின்வருமாறு:-**

1) அறிவிப்பின்படியான பரிசீலனைக்கான நாள், இடத்தில், நேரத்தில் தேர்தல் அலுவலர் இல்லை.
2) கையொப்பம் சரியில்லை, தொகுதி சரிவர நிரப்பப்படவில்லை, உறுதி மொழியினை அடிக்கவில்லை, வேட்புமனு சரிவர நிரப்பப்படவில்லை, உறுப்பினர் எண் சரியாக இல்லை மற்றும் இது போன்ற அற்ப காரணங்களுக்காக வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
3) வேட்பாளர்களுக்கு நிராகரிப்பதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.
4) வேட்பாளர்களுக்கு அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு அதை சரியானதுதான் என்று அறிந்து கொள்ளும் வகையில் நியாயமான எவ்வித உதவியும் செய்யப்படவில்லை.
5) குறிப்பிட்ட நபர்களின் வேட்புமனுக்கள் மற்றும் அவை சரியாக இல்லாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
6) குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன.
7) தேர்தல் அலுவலர் சில வேட்பு மனுக்களில் தாங்களாகவே திருத்தம் மேற்கொண்டு அவற்றை நிராகரித்துள்ளனர்.

8) தேர்தல் அலுவலரால் படிவம் *20*-ல் வேட்பாளர் பட்டியல் முறையாக வெளியிடப்படவில்லை.

**6.10.6. வேட்புமனு பரிசீலனை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள மேற்கண்ட அறிவுரைகள் தேர்தல் அலுவலர்களால் கைக்கொள்ள வேண்டிய மிக முக்கியமானதும் பார்வையாளர்களால் பார்வையிடப்பட வேண்டியதுமாகும் ஆயினும், வேட்புமனு பரிசீலனையானது சட்டத்தின்படி அதிகாரமளிக்கப்பட்ட தேர்தல் அலுவலரின் சட்டபூர்வ பணியாகும். நீதித்துறைக்கான *(Quasi judicial)* சட்டபூர்வ கடமையும் அதிகாரமும் கொண்ட தேர்தல் அலுவலர், வெளிநபர்களின் தலையீடு இல்லாமல் அவரது பணியினை மேற்கொள்ள வேண்டிய நிலையில், பார்வையாளர்கள் தேர்தல் அலுவலரின் முடிவுகளில் எவ்வகையிலும் குறுக்கிடுவது *(interfere / influence)* கூடாது. வேட்பு மனு பரிசீலனை நடவடிக்கையின் போது தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்காதிருத்தல் வேண்டும் *(abstain from directing or advising the Election Officer)*. சட்ட விதிகள் மற்றும் ஆணையத்தின் அறிவுரைகளின்படி தேர்தல் அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்பதை மட்டும் உறுதி செய்தல் போதுமானது. தேர்தல் அலுவலரின் நடவடிக்கைகளில் கடுமையான தவறுகள் *(glaring errors)* தெரியவரும் நிலையில் அதனை ஆணையத்திற்கு உடனடியாகத் தெரிவித்திடல் வேண்டும்.**

### 6.11. திரும்பப் பெறுதல்

**6.11.1.** தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் உரிய அறிவிப்பினை படிவம் எண். *19*-ல் வேட்பாளரால் கையொப்பமிடப்பட்டு, அவரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அவரது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவரோ தேர்தல் அலுவலரிடம் நேரடியாகக் கொடுத்து தனது வேட்புமனுவினை *(candidature)* திரும்பப் பெறலாம். ஒருமுறை திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டுவிட்டால் அதுவே இறுதியானதாகும் *(Final)* .

**6.11.2.** வேட்பு மனு தாக்கல் மற்றும் திரும்ப பெறுதல் ஆகிய நடவடிக்கைகளின் போது தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நேரங்கள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும். வேட்பாளர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப மற்றும் உள்ளூர் நிலவரங்களை அனுசரித்து அவற்றில் அனுசரணை போக்கு *(Compromise)* எந்நிலையிலும் கைக்கொள்ளுதல் கூடாது.

### 6.12. வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்

**6.12.1.** தேர்தல் அலுவலர், படிவம் *20*-ல், இறுதியாக சரியானதென ஒப்புக் கொள்ளப்பட்டு, ஆனால் திரும்பப் பெறப்படாத வேட்புமனுக்களில் கண்ட வேட்பாளர்களின் பட்டியலைத்

தயாரித்து, அறிவிப்பில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சங்க அலுவலக அறிவிப்புப் பலகையிலோ அல்லது அவரால் குறிப்பிடப்படும் வேறு ஒரு இடத்திலோ வெளியிட வேண்டும். வேட்பாளரின் பெயருக்கான ஆங்கில மொழி அகர *(Alphabetical order in English Language)* வரிசைப்படி வரிசை எண் வழங்கி இப்பட்டியல் தயாரிக்க வேண்டும்.

***6.12.2.*** மேலும் வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்னர் தேர்தலில் நிரப்பப்பட வேண்டிய இடங்கள் ஒதுக்கப்பட்ட இடங்கள், போன்றவற்றை விதிகளில் கூறப்பட்டபடி பரிசீலித்து போட்டி இருக்கும்/இல்லாத தொகுதிகள் பற்றி நன்கறிந்து, நிரப்பப்படாத இடங்கள் இருப்பினும், அல்லது போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களைவிட அதிகமாக இருப்பினும், விதிஎண்.*52(9)(h)* குறிப்பிட்டபடி விதி எண்.*52(9)(d)(e)* மற்றும் *(f)*-ன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து மீதம் உள்ள இடங்களுக்கான வாக்குப்பதிவு நடத்திட வேண்டும்.

## *6.13.* வாக்குப்பதிவு *(Polling)*

***6.13.1.*** இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, நிரப்பப்பட வேண்டிய இடங்களைவிட போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ள இனங்களில் வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் *(A poll shall be held)*'

***6.13.2.*** வாக்குப்பதிவு மேற்கொள்ள வேண்டிய இனங்களில் பார்வையாளர்களின் பணி மிக முக்கியமானதாகும்.

***6.13.3.*** வாக்குப்பதிவு நடவடிக்கைகளை கீழ்வரும் இனங்களாகப் பிரித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்று கண்காணித்தல் *(Supervise)* முக்கியமானதாகும்.

1) வாக்குப்பதிவுக்கு முந்தைய ஏற்பாடுகள்.
2) வாக்குப்பதிவு நாளன்று ஆற்ற வேண்டிய பணிகள்.

***6.13.4.*** வாக்குப்பதிவுக்கு முந்தைய ஏற்பாடுகள் மிகவும் முக்கியமானது. அடியிற் குறிப்பிட்ட வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்திடல் வேண்டும்.

1) வாக்குப்பதிவு நடைபெறும் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் *(Police Bandobast and Protection)*.

2) சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ள வாக்குச் சாவடிகள் மற்றும் இடங்கள் கண்டறிதல் மற்றும் உரிய நடவடிக்கைகள் எடுத்தல் *(Identification of critical, vulnerable booths and critical clusters).*

3) தேர்தல் நடவடிக்கைகளுக்காக மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் காவல்துறைப் பாதுகாப்பு தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் விவாதித்து நிலைமைக்கேற்ப நடவடிக்கை தொடருதல்.

4) தேவையான நேர்வுகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காவல்துறை மேற்கொள்வது குறித்து பரிசீலித்தல்.

5) மருத்துவம், சட்ட ஒழுங்கு மற்றும் இதர அவசர நிலைகளில் தொடர்பு கொள்ள வேண்டியோரின் பட்டியல், தொலைபேசி, கைபேசி எண் தயார் நிலையில் இருத்தல்.

6) வாக்காளர்கள் எவ்விதச் சிரமமுமின்றி வாக்களிக்கும் வகையில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து போதுமான எண்ணிக்கையில் தேர்தல் அலுவலர்கள், மாற்றுத் தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா? வாக்குப்பெட்டி, வாக்குச்சீட்டு உள்ளிட்ட வாக்குச் சாவடிகளுக்குத் தேவையான அனைத்து சாதனங்களும் *(polling materials)* வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்டு, தேர்தல் அலுவலர்கள் அதனைப் பெற்றுக் கொண்டுள்ளனரா? அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனவா? என்பதை உறுதி செய்தல்.

7) வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து போதுமான எண்ணிக்கையில் வாக்குசாவடிகள் இருத்தல்.

8) வாக்குச்சாவடியின் உட்புறத்தில் தேர்தல் அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்கள், முகவர்கள் ஆகியோர் அமர வேண்டிய இடங்களையும் வாக்குப்பதிவு செய்யும் மறைவிடம், வாக்குப் பெட்டி இருக்க வேண்டிய இடம் போன்றவை முறையாக இருத்தல்.

9) வாக்காளர்கள் உள்ளே வருவதற்கும் வெளியே செல்வதற்கும் தனித்தனி வழிகள் மற்றும் வாக்குச்சாவடிக்கு வெளியே ஆண் மற்றும் பெண் வாக்காளர்கள் தனித்தனியே காத்திருக்க இடவசதி ஏற்படுத்துதல்.

10) மகளிர் வாக்காளர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து தேவைக்கேற்ப அவர்களுக்கென தனிவாக்குச் சாவடி அமைத்தல்.

11) வாக்களிக்க ஏதுவாக வாக்குச் சாவடிகளை சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதை சரிபார்த்தல். வாக்காளர்களுக்கான வசதிகள் குறிப்பாக முதலுதவி மற்றும் அவசர சேவைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல். (First Aid, Emergency Service)

12) வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து தேர்தல் அலுவலர்களை நியமித்து, நியமிக்கப்பட்ட தேர்தல் அலுவலர்கள் தேர்தல் நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொள்ள உரிய பயிற்சி அளித்தல்.

13) போதுமான எண்ணிக்கையில் மாற்றுத் தேர்தல் அலுவலர்கள் நியமித்தல்.

14) வாக்குப் பதிவுக்கு முந்தைய நாளில் அனைத்து தேர்தல் அலுவலர்களும் வாக்குச்சாவடிக்கு பொறுப்பேற்றுவிட்டார்களா என்பதையும் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியல், வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டு உட்பட தேர்தல் சாதனங்கள் அனைத்தையும் தேர்தல் அலுவலர்கள் சரிபார்த்து பெற்று விட்டார்களா என்பதையும், அவை பாதுகாப்பாக வைத்திருப்பதையும் மேற்பார்வையிடல்.

### 6.13.5. வாக்குப்பதிவு நாளன்று ஆற்ற வேண்டிய பணிகள்

வாக்குச்சாவடியின் தலைமைப் பொறுப்பிலுள்ள தேர்தல் அலுவலர் வாக்குப்பதிவு நாளன்று ஆற்ற வேண்டிய பணிகளில் மிக முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன:

1) வாக்குச்சாவடிக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அனைவரும் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு முன்னதாகவே வருகை தரவேண்டும்.
2) குறிப்பிட்ட நேரத்திற்குள் வரவில்லை எனில் மாற்றுத் தேர்தல் அலுவலர் ஏற்பாடு செய்தல்.
3) வாக்குச்சீட்டுகளில் தேர்தல் அலுவலர் கையெழுத்திடுதல்.
4) முகவர்கள் வருகை, நியமனம், அமரும் இடம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்.
5) வாக்குச்சாவடிக்குள் நுழைய உரிமை உள்ளவர்களை மட்டும் அனுமதித்தல்.
6) வாக்குப்பெட்டிகளைத் தயார் செய்தல்.

7) வாக்குப்பதிவு அறிவிக்கப்பட்ட நேரத்தில் *(I.S.T)* வாக்குப்பதிவு தொடங்கப்பட வேண்டும். வாக்குப்பதிவைக் காலந்தாழ்த்தி தொடங்குவதோ வாக்குப்பதிவை முடிப்பதற்கென நிச்சயிக்கப்பட்ட நேரத்திற்கு மேல் நீட்டிப்பதோ கூடாது.

8) முதல் வாக்குப்பெட்டி முழுவதும் நிரம்பி விடுவதற்கு முன்னர் மற்றொரு வாக்குப் பெட்டியை தயார் நிலையில் வைத்து கொள்ள வேண்டும்.

9) உரிய அனுமதி பெற்றுள்ள மின் மற்றும் அச்சு ஊடகங்கள் *(Electronic and print Media)* வாக்குச் சாவடிக்கு வெளியே, ஒழுங்கும் அமைதியும் நிலவுவதற்கு உட்பட்டு, புகைப்படம் எடுக்க, செய்தி சேகரிக்க தடை ஏதும் இல்லை. ஆயின் வாக்காளர் ஒருவர் வாக்கினைப்பதிவு செய்யும் போது எக்காரணம் கொண்டும் படமெடுக்க அனுமதி கிடையாது.

**10) விதிஎண்.52(18)(a)-ல் சொல்லப்பட்ட காரணங்களினால் மட்டுமே வாக்குப்பதிவை நிறுத்தலாம். ஆனால் மழை பெய்தல், பலத்த காற்று வீசுதல் போன்ற காரணங்களினால் வாக்குப்பதிவை நிறுத்தல் கூடாது. ஏதாவது கலகமோ அல்லது வெளிப்படையான வன்முறையோ ஏற்பட்டால் அவற்றை அடக்க காவலர் உதவியைப் பயன்படுத்த வேண்டும். எனினும் கலகம் நீடித்து வாக்குப்பதிவை தொடர்ந்து நடத்துவது அறவே இயலாதென்று கருதினால் மட்டுமே வாக்குப்பதிவை ஒத்தி வைக்கலாம். இது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரைகளைக் கைக்கொள்ளாது, விதி எண். 52 (18) (a) மற்றும் விதி எண். 53(11)(a) ஆகியவற்றில் சொல்லப்பட்டவைக்கு முரணாக தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கையினை நிறுத்தம் செய்யும் நிலையில் விதிஎண்.52(18)(a)-ல் அறிவுறுத்தப்பட்டவாறு தேர்தல் நிறுத்தப்பட்ட விபரத்தை தேர்தல் நிறுத்தப்பட்ட தினத்தன்றே மாலைக்குள் தேர்தல் அலுவலராலும், மாவட்ட தேர்தல் அலுவலராலும் உடனடியாக ஆணையத்திற்கு அறிக்கை *(Report)* செய்திட வேண்டும். மேலும் மாவட்ட தேர்தல் அலுவலர் அதனை உடனடியாக பரிசீலனை செய்து அந்நடவடிக்கை சட்ட முரணானதுதான் என்று உறுதியாகும் நிலையில் தேர்தல் அலுவலரின் சட்டவிரோத ஆணையினை உடனடியாக ரத்து செய்து, மாற்று தேர்தல் அலுவலரை நியமித்து தேர்தல் நடவடிக்கை எந்நிலையில் நிறுத்தப்பட்டதோ அதே நிலையில் மீண்டும் தேர்தல் நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொள்ளவும், சட்ட முரணாக ரத்து செய்த அத்தேர்தல் அலுவலர் மீது பணி இடை நீக்கம் *(Suspend)* போன்ற உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்பவும் ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.1153/2020/கூ.தே.3, நாள் 26.09.2022- ல் (இணைப்பு -4) கூறப்பட்டுள்ளது.**

11) தேர்தல் அலுவலரின் நடத்தை மற்றும் செயல்பாடுகள் நியாயமாகவும் நடுநிலையுடனும், உறுதியுடனும் இருத்தல் வேண்டும்.
12) வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் வாக்குப்பெட்டிகளை முறையாக சீலிட்டு பாதுகாப்பாக வைத்திருத்தல். அவற்றிற்கு எவ்வித விடுதலுமின்றி போதுமான காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல்.
**13)** தேர்தல் ஆவணங்களை பட்டியலிட்டு ஒப்படைக்க தயாராக வைத்தல்.

## 6.14. வாக்கு எண்ணுகை மற்றும் தேர்தல் முடிவு அறிவித்தல் (*Counting and declaration of results*)

**6.14.1.** வாக்கு எண்ணுகை மற்றும் தேர்தல் முடிவு அறிவித்தல் எனும் இந்த இறுதி நடவடிக்கையே மிக மிக முக்கியமானதும் அதிக அளவு கவனத்துடனும், பொறுப்புடனும் கையாளப்படட வேண்டிய நடவடிக்கையாகும்.

**6.14.2.** இப்பணிக்குப் பொறுப்பான தேர்தல் அலுவலர் வாக்கு எண்ணுகை பற்றி விதி எண் 52 மற்றும் ஆணையத்தால் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கையேட்டில் தெரிவிக்கப்பட்டவற்றையும், வாக்கு எண்ணுகைக்கு முன்பு, நன்கு படித்து அறிந்து கொள்ள வேண்டும். வாக்கு எண்ணுகையின் போது தள்ளுபடி (*Reject*) செய்யப்படும் வாக்குச்சீட்டு பற்றி கேள்வி எழும் நிலையில் அவ்வப்போது விதிகளை அறிந்து கொள்ள முயற்சிப்பது வாக்கு எண்ணுகையினை தாமதப்படுத்துவதுடன், சிரமமான சூழ்நிலைகளையும் உருவாக்கலாம்.

### 6.14.3. வாக்கு எண்ணுகைக்கு முன்பு தேர்தல் அலுவலர் கவனிக்க வேண்டியவை:

1) வாக்குப் பதிவு நடைபெற்ற வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை மற்றும் பதிவான வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையினைப் பொறுத்து வாக்கு எண்ணுகை கூடம்/கூடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.
2) வாக்கு எண்ணுகை கூடம் தெரிவு செய்கையில் –
   (*i*) காவல்துறையினருடன் கலந்தாலோசித்தல்,
   (*ii*) தொலை தொடர்பு வசதிகள்,
   (*iii*) போதுமான மின்சாரம், காற்றோட்டம், கூடுதல் விளக்கு வசதி,
   (*iv*) மின்சாரம் தடைப்படும் நிலையில் மாற்று ஏற்பாடுகள்,
   (*v*) வேட்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் காத்திருக்க போதுமான திறந்த வெளி.

*3)* தேர்தல் அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்கள், வாக்கு எண்ணுகை உதவியாளர்கள், முதன்மை வாக்குப்பதிவு அலுவலர், வாக்கு எண்ணுகை முகவர்கள் ஆகியோருக்குத் தேவைப்படும் எண்ணிக்கையில் மேசைகள், நாற்காலிகள், நீள் இருக்கைகள் *(Bench)*, எழுதுபொருட்கள், எண்ணுகைக்கான தட்டுகள் *(Counting Trays)* அடையாள அட்டைகள் *(Badges)* போன்ற அனைத்தும் போதுமான அளவில் இருத்தல் வேண்டும்.

### *6.14.4.* வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல்

*1)* தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்ட நாள், நேரம், இடம் ஆகியவற்றின்படி வாக்கு எண்ணுகை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*2)* வாக்களிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்ட மற்றும் வாக்குச்சீட்டு கணக்கு உட்பட அனைத்து தேர்தல் ஆவணங்களையும் எவ்வித விடுதலுமின்றி வாக்கு எண்ணுகைக்கு வழங்கப்பட்டுவிட்டன என்பதை உறுதி செய்தல்.

*3)* வாக்குப் பெட்டிகள் மற்றும் அரக்கு முத்திரைகள் எவ்விதச் சேதாரம் மற்றும் மோசடியான மாற்றம் *(Damage / Tampering)* ஏதுமின்றி ஒப்படைக்கப்படுதல்.

*4)* பெறப்பட்ட வாக்குப்பெட்டிகள் / ஆவணங்கள் இறுதிவரை பாதுகாப்பாக வைத்திருத்தல்.

*5)* அனுமதி அளிக்கப்பட்டவர் மட்டுமே வாக்கு எண்ணுகை கூடத்தில் இருத்தல்.

*6)* வாக்கு எண்ணுகை மையத்தில் ஒழுங்கு அமைதி ஆகியவற்றை உறுதி செய்தல்.

*7)* போதிய அளவில் காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல்.

*8)* வாக்குப்பெட்டி சங்கத்திற்கு தொடர்புடையதுதான் என்பதை வாக்குப் பெட்டியில் குறிக்கப்பட்டிருக்கும் விபரங்களுடன் சரிபார்த்தல்.

*9)* வாக்குப்பெட்டி முழுமை கெடாமலும், மாற்றமின்றியும், திறக்கப்படாது, முத்திரைகள் உடைக்கப்படாது, நல்ல நிலையில் உள்ளதை வாக்கு எண்ணுகை முகவர்கள் மனநிறைவு அடையும் பொருட்டு ஆய்வு செய்து கொள்ள அனுமதித்தல்.

*10)* வாக்கு எண்ணுகையின் போது வாக்குச் சீட்டுகள் கட்டுகளாக்கி எண்ணுதல், வாக்குகளை எண்ணுவதற்கான நெறிமுறைகள், வாக்குகளை நிராகரித்தல் மற்றும் உரிய படிவத்தில் முடிவு அறிவித்தல் போன்ற நடவடிக்கைகள் ஆணையத்தால் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கையேடு மற்றும் விதி எண் *52*-ல் சொல்லப்பட்டபடி நடைபெறுதல் வேண்டும்.

## *6.15.* பொதுவாக *(General)* ஆற்ற வேண்டிய பணிகள்

*1)* கட்டுப்பாட்டு அறை மற்றும் புகார்கள் தெரிவித்தல், அதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான ஏற்பாடுகளை பரிசீலித்தல். *(Control room arrangement and complaint monitoring system)*

2) தேர்தல் நடவடிக்கைகளின் போது ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நடத்தை விதிகள் *(Code of Conduct)* ***(இணைப்பு - 5)*** பின்பற்றப்படுவதை கவனித்தல்.

3) போட்டியிடும் வேட்பாளர்கள், பிரிவு *162*-ன் கீழ் கூறப்பட்டுள்ள ***(இணைப்பு-6)*** குற்றச் செயல்களில் *(Corrupt Practice)* ஈடுபடும் நிலையில் அதனைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்தல்.

4) தேர்தல் அலுவலர்கள் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பற்றிய தங்களது பணிக்குறிப்பு *(Diary)* பேணுதலை உறுதி செய்தல்.

5) தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணி தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட அனைத்து அலுவலர்களும், தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை சரிவர செய்வதை மேற்பார்வையிடல்.

6) சட்டபூர்வமாக ஏற்பட்ட மற்றும் இடப்பட்ட கட்டளையினை / பணிகளை செய்ய மறுப்பது / தவறாகச் செய்வது / செய்யாமல் இருப்பது / கீழ்ப்படியாமை / கடுமையான நடத்தை தவறுதல் / போன்ற செயல்பாடுகள் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அலுவலர்கள் மேற்கொள்வாராயின் அவர்கள் மீது பணி இடை நீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக பரிசீலனை செய்ய வேண்டும், ஆணையத்திற்கு அதற்கான அறிக்கை அளித்திட வேண்டும்.

7) எக்கட்டத்திலும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படும் நிலையில் உடனடியாக ஆணையத்திற்குத் தெரிவித்து தேவையான நடவடிக்கைகளை உடன் எடுத்திடல் வேண்டும்.

## 6.16. ஆணையத்திற்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகள்

***6.16.1*** பார்வையாளர்கள் அடியிற்கண்ட நேர்வுகளில் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டிய சட்டபூர்வ கட்டாயம் உள்ளது.

***6.16.2 விதி 52-A (6) (c) :***

இந்த விதியின்கீழ் தேர்தல் அலுவலருக்கு வாக்குகளின் எண்ணிக்கையை நிறுத்த சொல்லவோ அல்லது முடிவினை அறிவிக்காமலிருக்கவோ தேர்தல் அலுவலருக்கு **பார்வையாளர்** கட்டளை இட்டிருந்தால் அதனை அவர் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

***6.16.3 விதி 52 - A (8) :***

ஒரு மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது வாக்காளர் பட்டியல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலர் ஒரு சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடத்துவதற்கு ஏதேனும்

இடையூறுகள் மேற்கொண்டுள்ளனர் என்று கருதும் நிலையில் அது குறித்து தக்க நடவடிக்கைகாக ஆணையத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

### *6.16.4* விதி *52 (23)*

விதி *52 (23)*-ல் கண்டுள்ள காரணங்களினால், சுதந்திரமான, நியாயமான *(Free & Fair)* தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்று கருதும் நிலையில் அது குறித்து உரிய நடவடிக்கைக்காக ஆணையத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

### *6.16.5.* சரிபார்ப்புப் பட்டியல்

ஒரு சங்கத்தின் வாக்காளர் பட்டியல் அலுவலர் *(Electoral Roll Officer)* மற்றும் தேர்தல் அலுவலர், சங்கத்தின் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுன் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள ஏதுவாக 'சரிபார்ப்புப் பட்டியல்' *(Check list)* இணைப்பில் (**இணைப்பு-7**) தரப்பட்டுள்ளது. **பார்வையாளர்கள்** தங்களது மேற்பார்வை பணியினை சிறப்புற ஆற்றிட இப்பட்டியல்கள் உதவிகரமாக இருக்கும்.

## *7.* நிர்வாகிகள் (தலைவர்/துணைத்தலைவர்) தேர்தல்:

***7.1.*** தேர்தல் நடவடிக்கைகளில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் *(Members of the Board)* தேர்தல் ஒரு கட்டமாகவும் *(Stage)*, அதனை தொடர்ந்து தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் ஒரு கட்டமாகவும் உள்ளன என்பதை தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய இணைப்பில் காணலாம். நடவடிக்கை எண் *1* முதல் *15* வரை நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பாகவும், எண் *16* மற்றும் *17* தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் தொடர்பாகவும் அவை அறிவிக்கப்படுகின்றன. தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கைகளை பிரிவு *53-(1)(a)*–ன் கீழ் இதற்கென மாவட்டத் தேர்தல் அலுவலரால் நியமிக்கப்படும் தேர்தல் அலுவலர் மேற்கொள்வார். இத்தேர்தல் அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்து, அக்கூட்டத்திற்குத் தலைமை *(Preside)* வகித்து தேர்தலை நடத்துவார்.

***7.2.*** ஒரு சங்கத்தின் தேர்தல் நடவடிக்கை தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் முடிவடைந்த பின்னரே முழுமை அடைவதால் பார்வையாளர்கள் இந்நடவடிக்கையினையும் கண்காணித்தல் *(Observer)* வேண்டும்.

## *8.* பார்வையாளர்களின் பங்களிப்பு :

***8.1.*** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், ஒழுங்காகவும், அமைதியாகவும், சட்டவிதிகளின்படியும் *(Free,*

*Fair, Peacefully, Orderly, as per Act, Rules and by-laws)* வெற்றிகரமாக நடத்தி முடித்திட **பார்வையாளர்களின்** முழு அளவிலான பங்களிப்பு *(Total participation)* எவ்வளவு முக்கியத்துவமானது என்று இதுவரை கூறப்பட்டதிலிருந்து நன்கு அறியலாம்.

***8.2*** கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டல குழுக்கள் ஆகியவற்றின் முன்பான மனுக்கள் மற்றும் ஆணையத்தால் பெறப்பட்ட புகார்கள் தொடர்பாக ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.*1111/2022*/கூதே*5* நாள் *20.10.2022*-ல் (**இணைப்பு-*8***) தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை நன்கறிந்து செயல்படுவது பார்வையாளர்களின் பணிசிறக்க உதவிடும்.

***8.3.*** **இவ்வகையில் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை ஆணையம் சிறப்பாக நிர்வகித்திட மற்றும் நடத்திட சங்கங்களின் நிர்வாகம், தேர்தல் நடைமுறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதி, சங்கத் துணைவிதிகள் பற்றிய ஆழ்ந்த அறிவும், நீண்டகால நிர்வாக அனுபவமும் கொண்ட உயர் அரசு அலுவலர்கள், பார்வையாளர்கள் என்ற முறையில், தங்களது பங்களிப்பை முழு அளவில் அளித்திடுவார்கள் என்று ஆணையம் மிகவும் உறுதியாக நம்புகிறது மற்றும் எதிர்பார்க்கிறது.**

## இணைப்பு -1

## (பத்தி- 4.3)

## பார்வையாளர் நியமனம் பற்றிய விதி 52 -A (6)

**விதி எண் 52 -A (6) :-**

(a) தேர்தல் ஆணையமானது ஒரு பார்வையாளரை நியமனம் செய்யலாம், அவர், ஒரு மாவட்டம் அல்லது ஒரு வருவாய் கோட்டம் அல்லது வருவாய் கோட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது ஒரு தொகுப்பு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் அல்லது தேர்தல்கள் நடைபெறுவதை கண்காணிக்கும் ஒரு அரசு அதிகாரியாக இருப்பார் மற்றும் தேர்தல் ஆணையத்தால் அவரிடம் ஒப்படைத்த பொறுப்பு அத்தகைய இதர செயல்பாடுகளை செயல்படுத்துதல் வேண்டும்.

(b) உட் - கூறு (a) இன் கீழ் நியமிக்கப்பட்ட பார்வையாளர், அதிக எண்ணிக்கையிலான வாக்குசாவடிகள் கைப்பற்றப்பட்டது நிகழ்ந்துள்ளது அல்லது வாக்கு பதிவு அல்லது வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற இடங்களில் அல்லது தேர்தல் அதிகாரியின் பாதுகாப்பு பொறுப்புக்கு அப்பால் ஒரு வாக்குச்சாவடிகளில் அல்லது வாக்குப்பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் சட்ட விரோதமாக வாக்கு சீட்டுகள் எடுத்தது அல்லது வாக்கு எண்ணிக்கை முடிவதற்கு முன்பாக எந்த நேரத்திலும், ஒரு வாக்கு சாவடியில் வாக்கு சீட்டுகள், தேர்தல் அதிகாரியின் பாதுகாப்பு பொறுப்புக்கு அப்பாற்பட்டு எடுத்தது அல்லது எதிர்பாராமல் அல்லது வேண்டுமென்றே அழிக்கப்பட்டது அல்லது தவறவிட்டது அல்லது பழுதடைந்தது அல்லது அந்த வாக்குசாவடி அல்லது இடத்தின் வாக்கு பதிவு முடிவுகள் தீர்மானிக்கப்பட இயலாத அத்தகைய ஒரு அளவுக்கு மோசடி திருத்தம் செய்துள்ளது என்று **பார்வையாளர்** கருதினால் , அதன் முடிவுகளை சாற்றுரைப்பதற்கு முன்பு, எந்த நேரத்திலும் வாக்குகள் எண்ணிக்கையை நிறுத்த அல்லது முடிவினை சாற்றுரைக்கக் கூடாதென கட்டளையிட அதிகாரம் உடையவராவார்.

(c) எங்கு, ஒரு **பார்வையாளர்** இந்த விதியின் கீழ், தேர்தல் அதிகாரிக்கு வாக்குகளின் எண்ணிக்கையை நிறுத்த அல்லது முடிவினை சாற்றுரைக்கக்கூடாதென கட்டளையிட்டுள்ளாரோ அந்த **பார்வையாளர்**, உடனடியாக மாவட்ட தேர்தல் அதிகாரி, மாநில தேர்தல் அதிகாரி மற்றும் தேர்தல் ஆணையருக்கு அந்த விவரங்களை தெரிவித்து மற்றும் அதன் பின்னர் அனைத்து முக்கியமான சூழ்நிலைகளை எடுத்துக் கொண்டு, அந்த தேர்தலை மேற்கொண்டு நடத்தி முடிக்க முறையானதென கருதும் உரிய கட்டளைகள் வழங்குதல் வேண்டும்.

**விளக்கம்**:- இந்த உப - விதியின் நோக்கத்திற்காக, "பார்வையாளர்" என்பதில் ஒரு மாவட்டம் அல்லது ஒரு வருவாய் கோட்டம் அல்லது ஒரு வருவாய் கோட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள, ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது ஒரு தொகுப்பு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் அல்லது தேர்தல்கள், இந்த விதியின் கீழ், கண்காணிக்கும் கடமை அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட, தேர்தல் ஆணையத்தின் எந்த அதிகாரியை சேர்த்து ஆகும்.

## இணைப்பு - 2

## (பத்தி - 5.1)

## கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை விபரங்கள்

| SI. No | Name of The Department | Primary Societies | Central Societies | Apex Societies | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Registrar of Co-operative Societies (RCS) | 7446 | 127 | 7 | **7580** |
| 2 | Milk Production and Dairy Development | 10423 | 25 | 1 | **10449** |
| 3 | Fisheries | 1443 | 12 | 1 | **1456** |
| 4 | Commissioner of Handlooms | 1332 | 14 | 2 | **1348** |
| 5 | Commissioner of Textiles | 0 | 6 | 1 | **7** |
| 6 | Registrar of Co-operative Societies (Housing) (RCSH) | 748 | 0 | 1 | **749** |
| 7 | Palm Products and Development Board (PALM) | 720 | 8 | 1 | **729** |
| 8 | Industries and Commerce (INDCOM) | 287 | 11 | 2 | **300** |
| 9 | Khadi and Village Industries (KVI) | 153 | 1 | 0 | **154** |
| 10 | Animal Husbandry and Veterinary Services | 107 | 0 | 0 | **107** |
| 11 | Agriculture | 92 | 10 | 0 | **102** |
| 12 | Social Welfare | 99 | 1 | 0 | **100** |
| 13 | Sericulture | 25 | 0 | 1 | **26** |
| 14 | Integrated Child Development Services (ICDS) | 25 | 0 | 0 | **25** |
| 15 | Sugar | 0 | 16 | 1 | **17** |
|  | ***Total*** | ***22900*** | ***231*** | ***18*** | ***23149*** |

# இணைப்பு - 3

## (பத்தி 6.2)

## கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடவடிக்கைகள்

| நடவடிக்கை வ.எண் | நடவடிக்கை விபரம் | நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர் விபரம் | நடவடிக்கை வகைப்படுத்துதல் |
|---|---|---|---|
| 1 | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | மாவட்டத் தேர்தல் அலுவலர் | தேர்தல் அறிவிப்பு |
| 2 | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | | |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | | |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | | |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | வாக்காளர் பட்டியல் அலுவலர் | வாக்காளர் பட்டியல் |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | | |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | | |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | | |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | | |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | | |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | தேர்தல் அலுவலர் | வேட்பு மனு |
| 12 | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | | |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | | |
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | தேர்தல் அலுவலர் | வாக்குப்பதிவு |
| 15 | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | தேர்தல் அலுவலர் | ஓட்டு எண்ணுகை முடிவு அறிவித்தல் |
| 16 | தலைவர் / துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் (நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன்) | தேர்தல் அலுவலர் | அலுவல் நிர்வாகிகள் *(Office Bearer election)* |
| 17 | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நாள் | | |

**ஆணையர்**

# இணைப்பு - 4

## பத்தி 6.13.5 (10)

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை - 18**

**அனுப்புநர்:**
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்:**
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

**ந.க.1153/2020/கூ.தே.3** **நாள்: 26.09.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** கூட்டுறவுத் தேர்தல்கள் – விதி எண் 52(18)(a) மற்றும் 53(11)(a)-ன் கீழ் சட்டஒழுங்கு எனக்காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல் -அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:** ஆணையத்தின் கடிதம் ந.க.எண்.1153/2020/கூ.தே.3 நாள் 10.09.2020.

பார்வையில் கண்ட கடிதத்தில் (நகல் இணைப்பு) கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் அலுவலர்கள், சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளின் போது 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண்.52(18)(a) மற்றும் 53(11)(a)-ன் படி சங்கத் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தியது பற்றி ஆணையத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கைகளை ஆணையம் பரிசீலனை செய்து அவற்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை தெரிவித்தும், இந்நிலை மேலும் தொடராது காத்திடவும், தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை முறையாகக் கையாண்டு, தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பல்வேறு சங்கத் தேர்தல் நடவடிக்கைகளில் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி *(Abuse and misuse of power and authority)* தேர்தல் அலுவலர்கள் தாமாக *(Suo motu)*, ஒருதலை பட்சமாக *(Partisan)*, தங்களது விருப்பத்திற்கிணங்க *(on their whims and fancies)*, சட்டத்திற்கு முரணாக, *(Contrary to law)*, சட்டத்தின் முன் நிலைநிறுத்த

முடியாத *(unenforceable)*, நிறுத்தல் ஆணைகளை *(Stop order)* தற்போதும் பிறப்பிக்கின்றனர் என்பது ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையினை ஆணையம் கவனத்துடன் பரிசீலித்து அதனடிப்படையில் ஏற்கெனவே பார்வையில் வழங்கப்பட்ட அறிவுரைகளுடன் கீழ்வரும் அறிவுரைகளை விதி எண்.*52-A(9)* மற்றும் *(10)*-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினைக் கைக்கொண்டு ஆணையம் வழங்குகிறது.

**விதி எண்.*52 (18) (a)*-ல் சொல்லப்பட்டுள்ளதாவது :**

> ***"கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்தநிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு காரணமாக மேற்கொண்டு தேர்தலை நடத்த முடியாது என்கிற நிலையில், அத்தகைய செயலுக்கான காரணங்களை, எழுத்தாலான பதிவு செய்து, தேர்தலை நிறுத்தி வைக்க, தேர்தல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு."***

**விதி எண்.*53 (11) (a)*-ல் கூறப்பட்டுள்ளதாவது :**

> ***கலகம் விளைவிப்பவர்களால் அல்லது வெளிப்படையான வன்முறையினால், தேர்தல் நடவடிக்கைகள் எந்நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றத்தின் பேரிழப்பு காரணமாக, மேற்கொண்டு தேர்தலை நடத்த இயலாத நிலையில், அத்தகைய செயலுக்கான காரணங்களை, எழுத்தாலான பதிவு செய்து, தேர்தலை நிறுத்தி வைக்க, தேர்தல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு."***

மேலே சொல்லப்பட்ட விதி எண்.*52 (18) (a)* மற்றும் விதி எண்.*53 (11) (a)* ஆகியவற்றினை ஆணையம் மிக கவனமாக பரிசீலனை செய்ததில் :

***"கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்த நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ" என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதாவது தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில் அவ்வகை சம்பவங்கள் ஏற்பட்டால் மட்டுமே (Only at the time of) தேர்தல் அலுவலர் தேர்தலை நிறுத்தலாம் என்று அறியமுடிகிறது. அம்மாதிரி சம்பவங்கள் நிகழப்போவதாக எண்ணியோ, அல்லது அச்சத்தினாலோ (Anticipation, Assumption and Apprehension) தேர்தல் நடவடிக்கையை நிறுத்த தேர்தல் அலுவலருக்கு அவ்விதிகளின்*** கீழ் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் இம்மாதிரி காரணங்களை கூறி விதிகளுக்குப் புறம்பாக தேர்தலை நிறுத்துவது சட்ட விரோதமானது. இம்மாதிரி செய்கைகள் ஆணையம் சுதந்திரமான, நேர்மையான, வெளிப்படையான தேர்தல் நடத்தும் தனது கடமையை செய்வதில் குறிக்கீடு செய்வதாகும் மற்றும் தடுப்பதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

இவ்வகையில் 2018 ஒட்டுமொத்த தேர்தல்களில் (Enmasse 2018) 115 சங்கங்களுக்கான தேர்தல்களை தேர்தல் அலுவலர்கள் நிறுத்தியுள்ளனர் என்பது மிகவும் கவலை தருவதாகும். இந்நிலை இனியும் தொடர இடம் தரலாகாது என்று ஆணையம் வலியுறுத்த விரும்புகிறது. தவிரவும் மீண்டும் தேர்தல்கள் நடத்துவதற்காகும் காலவிரயம், பணச்செலவும், பொருட்செலவு, மனித சக்தி வீணாதல் (Loss of Manpower) போன்ற எதையும் கருத்தில் கொள்ளாது மிகச் சாதாரணமாக அற்ப காரணங்களைக்காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவது மிகவும் கண்டனத்திற்குரியதும் ஏற்றுக் கொள்ள இயலாததுமாகும் என்று ஆணையம் திடமாக கருதுகிறது.

எனவே இது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரைகளைக் கைக்கொள்ளாது, விதி.எண் 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) ஆகியவற்றில் சொல்லப்பட்டவைக்கு முரணாக தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கையினை நிறுத்தம் செய்யும் நிலையில் விதி எண் 52(18)(a)-ல் அறிவுறுத்தப்பட்டவாறு தேர்தலை நிறுத்தப்பட்ட விபரத்தை தேர்தல் நிறுத்தப்பட்ட தினத்தன்றே மாலைக்குள் தேர்தல் அலுவலராலும், மாவட்ட தேர்தல் அலுவலராலும் உடனடியாக ஆணையத்திற்கு அறிக்கை (Report) செய்திட வேண்டும். மேலும் மாவட்ட தேர்தல் அலுவலர் அதனை உடனடியாக பரிசீலனை செய்து அந்நடவடிக்கை சட்ட முரணானதுதான் என்று உறுதியாகும் நிலையில் தேர்தல் அலுவலரின் சட்டவிரோத ஆணையினை உடனடியாக ரத்து செய்து, மாற்று தேர்தல் அலுவலரை நியமித்து தேர்தல் நடவடிக்கை எந்நிலையில் நிறுத்தப்பட்டதோ அதே நிலையில் மீண்டும் தேர்தல் நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொள்ளவும், சட்ட முரணாக ரத்து செய்த அத்தேர்தல் அலுவலர் மீது பணி இடை நீக்கம் (Suspend) போன்ற உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்பவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதனை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும் தெரிவிக்கப்பட்ட விபரத்தை 10.10.2022-க்குள் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/-

ஆணையர்

நகல்:

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.

6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
9. காவல்துறை இயக்குநர்.
10. மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
11. அலுவலக இருப்புக் கோப்பு 2022

**jäœehL khãy T£LwÎ¢ r§f§fë ‹ nj®jš Miza«, br‹id - 18.**

mD¥òe®

Kidt®.K.uhn#ªÂu‹, Ï.M.g.,
Miza®,
jäœehL khãy T£LwÎ¢ r§f§fë‹ nj®jš Miza«,
273, m©zhrhiy, njdh«ng£il,
br‹id - 600 018.

bgWe®

1) T£LwÎ¢ r§f§fë‹ gÂths®/ khãy¤ nj®jš mYty®.

2) mid¤J bra‰gÂths®fŸ/ khãy¤ nj®jš mYty®fŸ.

e.f.1153/2020/Tnj3 ehŸ 10.09.2020

mŒah/m«ikp®,

bghUŸ: T£LwÎ¤ nj®jšfŸ - ã®thf¡FG cW¥Äd®fŸ k‰W« jiyt®, Jiz¤jiyt®nj®jšfŸ - 1988« M©L jäœehL T£LwÎ r§f éÂfŸ, éÂv© 52(18) (a) k‰W« éÂv© 53(11)( a) M»at‰¿‹ Ñœnj®jšelto¡iffis ãW¤Jjš (Stop) Áy m¿Î iufŸ tH§Fjšbjhl®ghf

•••••

jäœehL T£LwÎ¢ r§f§fë‹ nj®jš Miza¤jhš tH§f¥gL« T£LwÎ¢ r§f§fS¡fhd nj®jš Â£l§fŸ kht£l nj®jš mYtyuhš btëæl¥g£L, mtuhš ãaä¡f¥gL« (Appoint) th¡fhs® g£oaš mYty® (Electoral Officer) k‰W« nj®jš mYty® (Election Officer) M»nahuhš 1988« M©L jäœehL T£LwÎ¢ r§f éÂfŸ, (Ï å éÂvd¥gL«) éÂv© 53 k‰W« 53 M»at‰¿‹ Ñœnj®jš elto¡iffŸ nk‰bfhŸs¥gL»‹wd.

Áy nj®jš elto¡iffë‹ nghJ mt‰iw bjhl®ªJ el¤j Ïayhj Nœãiyfëš nk‰brh‹d nj®jš el¤J« mYty®fŸ ã®thf¡FG cW¥Äd®fŸ nj®jšfëš éÂv© 52(18)(a)-‹ ÑG«, jiyt®, Jiz¤jiyt® nj®jšfëš éÂv© 53(11)(a)-‹ ÑG« j§fS¡F tH§f¥g£LŸs mÂfhu¤ij¡ bfh©L nj®jš elto¡iffis ãW¤Â (Stop) MizæL»‹wd®. m›thW nj®jš ãW¤j¥g£l égu¤Âid mj‰fhd fhuz§fis¤ bjçé¤J, éÂv© 52(18)(b) k‰W« éÂv©53(11)(b)‹ Ñœ f£lisæ£LŸsgo Miza¤Â‰F m¿¡if (Report) mD¥ò»‹wd®.

nk‰Tw¥g£l m¿¡iffis Miza« äf¡ftdKl‹ gçÓè¤jÂš, mt‰¿š éÂfŸ g‰¿ rçtu mšyJ K‰¿Y« F¿¥Ãl¥glhJ«, éÂæš Tw¥glhj fhuz§fë‹ mo¥gilæš nj®jš elto¡iffŸ ãW¤j¥g£oU¥gJ«, ãW¤j¥g£l gy Ïd§fëš nj®jš mYty®fŸ cça ftd« (Proper application of mind) brY¤jhJ«, Ï›thW ãW¤j¥gL« ãiyæš vG« r£l¥ó®t éisÎfŸ k‰W« jh¡f¤ij (Legal Consequences and Seriousness) ftåahJ« äfÎ« thyhakhf nj®jš elto¡iffis ãW¤Â Mizæ£oU¥gJ« k‰W« gy FiwghLf S« f©l¿a¥g£ld.

nj®jš mYty®fë‹ Ï¢brašghLfŸ T£LwÎ r§f nj®jšfis el¤Jt Âš fhy éua«, ãÂ k‰W« kåj r¡Â ÏH¥ò M»at‰iw V‰gL¤Jtjhf Î« muÁay ik¥ò r£l¤Â‹goahd r£ló®t

f l i kæ i d (Constitutional Obligation) M i z a« ã i wn t‰W t Âš Ï i l ôW brŒ t jh f Î« f U j Ï l KŸ s d.

Ï › thW nghÂa r£l¥ó®t fhu z §f ë ‹¿ nj®jš el to¡ i f fŸ nj®jš mY t y®f shš ãW¤j¥gL t J F¿¤J, kh©g i k ca®ÚÂk ‹w« k‰W« kh©g i k T£LwÎ tH¡F f S ¡fhd Áw¥ò¡ FG¡ fŸ f L i kahf é k®Á¤J Ÿ s J.

Ï ª ã i y nkY« bjhluhJ fh¤Â l Î«, nj®jš el to¡ i f f i s ãW¤J t j‰F j§f S ¡F tH§f¥g£LŸ s mÂ fhu¤Â i d nj®jš mY t y®fŸ éÂ f S ¡F£g£L K i wahf ¡ (Proper) i fah© L nj®jšf i s Rj ª Âukhf Î« ãahakhf Î« (Free and fair) el¤Â l Î« Ñœ t U« m¿ Î iufŸ tH§f¥gL » ‹wd.

1) v ª j b thU nj®jš el to¡ i fæ i dÍ« é Â v©.52(18)(a) k‰W« 53(11)(a) M » a t‰¿š brhšy¥g£l fhu z §f S ¡fhf k£oYnk nj®jš mY t y® ãW¤ j yh« (shall have power to stop).

2) nj®jš el to¡ i f fŸ e i l bg‰W tU« ã i yæš fyf« (Riot) k‰W« b t ë ¥g i lahd t ‹ K i w (Open Violence). Ï a‰ i f Ó‰w¤ jhš ngçH¥ò ngh ‹ w r«g t §f shš el to¡ i f f i s bjhl®ª J nk‰bfhŸ s Ï ayhj ã i yæš k£Lnk m¤nj®jš el to¡ i fæ i d ãW¤ j mÂ fhu« tH§f¥g£LŸ snj jéu, Ï¢r«g t §f i s vÂ®neh¡»nah (Anticipate) mšy J C f« brŒnjh (Presume or Assume) mšy J cça têfh£Ljš Ï ‹¿ fhtš J i w mY t y® v tçlä U ª jh t J m¿¡ i f bg‰nwh nj®jš el to¡ i fæ i d ãW¤J t j‰F é Â v©.52(18)(a) k‰W« é Â v©.53(11)(a)š têtif brŒa¥gl éš i y v ‹g i j f t d¤Âš bfhŸs¥gl nt © L«.

3) nj®jš el to¡ i f fŸ ãW¤ j¥gL« ã i yæš m › thW ãW¤ j¥gL t j‰fhd fhu z §fŸ gÂ Î brŒÂ l š (Record) nt © L«.

4) nj®jš el to¡ i f é Â v©.52(18)(a) mšy J é Â v©.53(11)(a) Ñœ ãW¤ j¥g£LŸ s égu« (Fact) c l doahf m¿ é ¡ f¥gl nt © L«. (Announce).

5) nj®jš el to¡ i f ãW¤ j¥gl égu« kh t £l nj®jš mY t y®, khãy nj®jš mY t y® k‰W« nj®jš M i z a¤Â‰F c l doahf m¿¡ i f (Report) brŒa nt © L«.

6) nj®jš el to¡ i f fŸ nk‰bfhŸ S« nj®jš mY t y®fŸ nj®jš el to¡ i f f i s ãW¤ j éU«ò« ã i yæš nk‰ Tw¥g£l m¿ Î iuf i s j twhJ f i lÃo¤ jš nt © L«. j§f S ¡F V‰g£l r£ló®t f l i kf i s brŒa j tWtnjh mšy J j twhf brŒtnjh (Nondoing or Misdoing) r£l k‰W« xG§F el to¡ i f f S ¡F Ï l« jU t jhf m i kÍ« v ‹g i j f t d¤Âš bfhŸs nt © L«.

7) khãy nj®jš mY t y®fŸ é Â v©. 52(3)(c) ‹ Ñœ bghW¥gh¡ f¥g£LŸsgo, kh t £l nj®jš mY t y®fŸ k‰W« nj®jš mY t y®f S ¡F é Â v© 52(18)(a)/53(11)(a) ‹ Ñœ nj®jš el to¡ i f fŸ ãW¤J t J bjhl®ghd m¿ Î iuf i s j twhJ i f¡bfhŸ s m¿ÎW¤Â l Î« Ï J bjhl®ghf nk‰bfh© l el to¡ i f g‰¿a m¿¡ i fæ i d 25.09.2020¡ FŸ M i z a¤Â‰F mD¥Ã l Î« nf£L¡bfhŸ s¥gL »wh®fŸ.

x«/-
M i z a®

# இணைப்பு - 5

## (பத்தி 6.15 (2))

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை - 18.

**அனுப்புநர்**

திரு. தயானந்த் கட்டாரியா, இஆப
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்/
மாநில தேர்தல் அலுவலர்

2) அனைத்து செயற்பதிவாளர்கள்/
மாநில தேர்தல் அலுவலர்கள்

**ந.க.344/2018/கூதே.5** **நாள்: 05.09.2022**

**ஐயா,**

**பொருள்:** கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தலுக்கான நடத்தை விதிகள் (Code of Conduct) அமுல்படுத்துதல் – தொடர்பாக.

**பார்வை:** ஆணையத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள் 05 .03.2018.

******

கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகளுக்குட்பட்டும் (இனி சட்டம் மற்றும் விதி எனப்படும்) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி ஆணையம்) நடத்த வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, ஆணையத்திற்கு விதி 52-A(9) ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கைக்கொண்டு பார்வையில் கண்ட கடிதத்தின் படி தேர்தல் நடத்தை விதிகளை ஆணையம் அறிவித்தது.

அவ்விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு இணைப்பில் கண்டுள்ளவாறு புதிய நடத்தை விதிகள் அறிவிக்கப்படுகின்றன. இனிவரும் கூட்டுறவு சங்கத் தேர்தல் அறிவிப்புகளுக்கு இவ்விதிகள் பொருந்துவதாகும்.

தவிரவும் ஆணையத்தால் தேர்தல் திட்டம் வழங்கப்பட்டு தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்ட சில சங்கங்கள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நடத்தை விதிகளை கைக்கொள்ளவில்லை என்றும், அவ்வாறு நடத்தை விதிகளை கைக்கொள்ளாது அவற்றிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சங்க நடவடிக்கைகள் சட்டத்தின் முன் நிலை நிறுத்ததக்கதல்ல *(Un Enforceable)* என்றும், சட்ட விரோதமானதும், *(Illegal, Ultra Vires)* தாவாக்குரியதுமாகும் *( Arbitrary)* என்றும் பாதிக்கப்பட்ட சிலர் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்ததுடன், ஆணையத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு ஆணையத்தால் சங்க நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட சட்டப்பூர்வ கட்டளைகளை *(Law full Order Direction)* செயல்படுத்தாது இருப்பது சட்டப்பிரிவு 157-ன்கீழ் சிறை தண்டனை மற்றும் அபராதம் *(Imprisonment and fine)* விதிக்கக்கூடிய குற்றமாகும் *(Offence)*.

மேலும் இம்மாதிரி நடத்தை விதிகளை புறக்கணிப்பதன் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் நடவடிக்கைகளில் சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துவதானது, சட்டப்பிரிவு 162-ன்கீழ் ஓராண்டு வரை சிறைத் தண்டனை *(Imprisonment)* மற்றும் ரூ.10000/- வரை அபராதம் *(Fine)* விதிக்கக்கூடிய குற்றமாகும்.

எனவே தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வகையான நிகழ்வுகளுக்கு இடம்தராது, நடத்தை விதிகளை முழுவதுமாகவும் முறையாகவும் பின்பற்றிடவும், சங்கத்தின் தேர்தல்களை, சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படை தன்மையுடனும், சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்துவதையும், அவ்வாறு நடத்தப்படுவதை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும் உறுதி செய்திடவும் தாங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் சங்கங்களுக்கும், தொடர்புடைய அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கிட ஆணையம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பாக தங்கள் அளவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையினை *(Action taken Report)* 20.09.2022க்குள் அனுப்பிடவும் ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

**ஒம்/-**

**ஆணையர்**

**இணைப்பு : நடத்தை விதிகள் - 2 பக்கங்கள்**

## T£LwÎ¢ r§f¤ nj®jšfŸ - 2018

## el¤ij éÂfŸ m¿é¥ò

**K‹åiy : ÂU.jahd ª¤ f£lhçah, Ï.M.g., Miza®**

**e.f.344/2018/T.nj.5** **ehŸ : 05.09.2022**

**bghUŸ :** T£LwÎ¢ r§f nj®jšfŸ - T£LwÎ r§f¤ nj®jšfŸ el¤ij éÂfŸ (Code Of Conduct) - m¿é¤jš

-----

jäœehL T£LwÎ¢ r§f§fë‹ éÂfŸ 1988, éÂ v©. 52-A(9)-š mÂfhukë¡f¥g£lgo T£LwÎ¢ r§f¤Â‹ nj®jšfis ãahakhfÎ«, RjªÂukhfÎ« eilbgWtj‰F jäœehL khãy T£LwÎ¢ r§f¤ nj®jš Miza« Ñœfh©Q« nj®jš el¤ij éÂfis m¿é¡»wJ.

1) moæ‰F¿¥Ã£l el to¡iffŸ jil brŒa¥gL»‹wd (Prohibited) :

i) r§f« el¤JtJ bjhl®ghd tho¡ifahd elto¡iffŸ (Usual Business) jé®¤J bfhŸif KoÎfŸ VJ« (No Policy decision) ã®thf¡FG vL¤jš;

ii) r§f¤Â‹ bghJ¥nguit t¡ T£l« T£Ljš;

iii) òÂa »isfŸ VJ« bjhl§Fjš;

iv) r§f cW¥Ãd®fŸ k‰W« gâ ahs®fS¡F ãÂ¢ rYiffŸ (Financial Benefit) tH§Fjš;

v) T£LwÎ¢ r§f gâ ahs®fŸ bjhl®ghd òÂa ãakd MizfŸ, gâ æl khWjšfŸ, gjé ca®Î MizfŸ VJ« tH§Fjš. (maš gâ æš (On Deputation) ÏU¡F« muR mYty®fS¡F ÏJ bghUªjhJ) ;

vi) òÂa Â£l§fŸ m¿é¤jš. (Announcement of any New Schemes) ;

vii) òÂa Â£l§fŸ k‰W« f£ll§fS¡fhd mo¡fš eh£Ljš. ( Laying of Foundation Stones of Projects or Schemes of any kind) ; k‰W«

viii) r§f¤Â‰F brhªjkhd mšyJ MS ifæYŸs Ïl§fŸ, f£ol§fŸ cŸë£l miraht brh¤J¡fŸ k‰W« thfd«, jsthl« ngh‹w mirÍ« brh¤J vJthf ÏU¥ÃD« m¢brh¤Âid r§f¤ nj®jèš ngh£oæL« nt£ghs®fnsh mšyJ ngh£oæL« nt£ghs®fS¡fhf k‰wt®fnsh ga‹gL¤Jjš mšyJ ga‹gL¤j mDkÂ¤jš.

2) ã®thf¡FG cW¥Ãd®fŸ, jiyt®/Jiz¤jiyt® M»nahU¡F r§f¤ÂèUªJ thfd§fŸ tH§f¥g£oU¥Ã‹ mit ÂU«g¥ bgwnt©L«.

3) Ï¤nj®jš el¤ij éÂfŸ nj®jš Â£l« btëæl¥g£l r§f§fS¡F k£L« bghUªJ«. nj®jš Â£l« btëæl¥g£l ehë èUªJ òÂa ã®thf¡FG bghW¥ng‰F« tiu (Assume Office) tiu Ïªel¤ij éÂfŸ mkèš ÏU¡F«.

4) r§f elto¡iffŸ bjhl®ªJ nk‰bfhŸs nt©oa mtru mtÁa k‰W« jé®¡f Koahj ãiyæš mJ F¿¤j Ïd§fëš jäœehL khãy T£LwÎ¢ r§f§fë‹ nj®jš Miza¤Âš égu§fŸ bjçé¤J (Relief Reasons) mDkÂ¡fhd nfhç¡if mD¥gyh«.

5) Miza¤Â‹ r£ló®t f£isahd nkny F¿¥Ã£l Ïªel¤ij éÂfis nj®jš el¤J« r§f§fŸ nk‰bfhŸs jtW« ãiyæš mj‰F bghW¥ghd t®fŸ, 1983-« M©L jäœehL T£LwÎ r§f§fŸ r£l«, ÃçÎ 157(2) k‰W« ÃçÎ 162 (h)-‹ Ñœ Áiwj©lid mšyJ mguhj« mšyJ Ï›éu©Lnkh éÂ¤J j©o¡f¥gl j¡ftuht® v‹W bjçé¡f¥gL»wJ.

ஒம்/-

ஆணையர்

## இணைப்பு - 6

## (பத்தி 6.15 (3))

**பிரிவு 162 : நிர்வாக சபை அங்கத்தினர்களின் அல்லது நிர்வாக சபை அலுவல் அதிகாரிகளின் தேர்தல்களில் ஒழுங்கீனமான நடவடிக்கைள் மேற்கொள்வதற்கான தண்டனை:**

*நிர்வாக சபை அங்கத்தினர்களின் அல்லது நிர்வாக சபை அலுவல் அதிகாரிகளின் தேர்தல் நடைபெறும் முன்பு, அந்த நேரத்தில் அல்லது பின்பு, எந்த நபரும் , -*

a) *பெயர் குறித்து தாக்கல் செய்யும் வேட்புமனுவை மோசடியாக தெளிவற்றதாக்குதல் அல்லது மோசடியாக அழித்தல்; அல்லது*

b) *அதிகாரமளிக்கப்பட்ட நபர் ஒருவரின் அதிகார அமைப்பின்படி அல்லது அதனால் ஒட்டப்பட்டுள்ள பட்டியல், அறிவிப்பு அல்லது பிற ஆவணம் மோசடியாக உருகெடுக்கப்படுகிறது, அழிக்கப்படுகிறது அல்லது நீக்கப்படுகிறதென்றால்; அல்லது*

c) *எந்த வாக்கு சீட்டு அல்லது எந்த வாக்கு சீட்டின் மீதான முறையான குறியீடு அல்லது அடையாளத்திற்காக அளிக்கப்பட்ட எந்த விளம்புகையினை மோசடியாக தெளிவற்றதாக்குதல் அல்லது மோசடியாக அழித்தல் ; அல்லது*

d) *எந்த உரிய அதிகாரமின்றி, எந்த நபருக்கும் எந்த வாக்கு சீட்டினை வழங்குதல் அல்லது எந்த நபரிடமிருந்தும் எந்த வாக்கு சீட்டினை பெறுதல் அல்லது எந்த வாக்கு சீட்டினை உடமையில் வைத்திருத்தல் ; அல்லது*

e) *அவர், அவ்வாறு சட்டப்படி அதிகாரமளிக்கப்பட்டபடி போட வேண்டிய வாக்குசீட்டு தவிர எதனையும், மோசடியாக எந்த வாக்கு பெட்டியிலும் போடுதல் ; அல்லது*

f) *தேர்தல்களின் நோக்கத்திற்காக, அப்போது பயன்படுத்தப்படும், எந்த வாக்கு பெட்டி அல்லது வாக்கு சீட்டுகளை உரிய அதிகாரமின்றி அழித்தல், எடுத்தல், திறத்தல் அல்லது இதர வகையில் இடைமறித்தல் ; மற்றும்*

g) *மோசடியாக அல்லது எந்த உரிய அதிகாரமின்றி, நேர்விற்கேற்ப முன் கூறிய நடவடிக்கை எதையும் செய்ய முயற்சித்தல் அல்லது வேண்டுமென்றே உதவுதல் அல்லது அத்தகைய நடவடிக்கைகளை செய்வதற்குத் தூண்டுதல் ; மற்றும்*

*h) நேரடியாக அல்லது மறைமுகமாக, எந்த நபருக்கும், எந்த பரிசு அளித்தல் அல்லது எந்த கையூட்டும் அளிக்க உறுதியளிக்கும் நோக்கத்தில் உள்ளடங்கியதானது ,*

*(i) ஒரு தேர்தலின் போது, ஒரு வேட்பாளராக, ஒரு நபர் போட்டியிட அல்லது அவ்வாறு கோட்டியிடாமல் இருக்க அல்லது திரும்ப பெறுதல் அல்லது அவ்வாறு திரும்ப பெறாமலிருக்க; அல்லது*

*(ii) ஒரு தேர்தலில், ஒரு நபர் வாக்களிக்க அல்லது வாக்களிக்காமலிருக்க அல்லது அவர் வேட்பாளராக, அவ்வாறு இருப்பதற்காக அல்லது இல்லாமலிருப்பதற்காக அல்லது திரும்ப பெற்றதற்காக அல்லது திரும்ப பெறாமலிருந்ததற்காக, ஒரு நபருக்கு அவ்வாறு ஒரு வெகுமானம் அளித்தல் ; அல்லது*

*(iii) ஒரு அங்கத்தினர் வாக்களித்தற்காக அல்லது வாக்களிக்காமலிருந்ததற்காக,*

*ஒரு வருட காலம் நீடிக்கத்தக்க அத்தகைய கால வரையிலான சிறை அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கத்தக்க அத்தகைய அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டிக்கத்தக்கவராவார்.]*

## இணைப்பு - 7

## (பத்தி 6.16.5)

### சரிபார்ப்புப் பட்டியல்

### *CHECK LIST FOR ELECTORAL OFFICERS AND ELECTION OFFICERS*

***(Not exhaustive but only illustrative)***

1. *Have you gone through Rule 52, 52-A, & 53, and also the booklets, circular instructions brought out by the Commission thoroughly with particular reference to the duties and responsibilities of Electoral Officer and Election Officer?*
2. *Have you received a copy of the order of the District Election Officer appointing you as Electoral Officer / Election Officer under the relevant rules?*
3. *Have you received a copy of the Election Notice issued by the District Election Officer for each society to which you are appointed as Electoral Officer / Election Officer?*
4. *Have you verified and satisfied that the Election Notice in respect of each Society for which you are appointed as Electoral Officer / Election Officer has been published and communicated as prescribed under the relevant rules?.*
5. *Have you programmed your election duty strictly in conformity with the days, dates and time as notified in the election notice?*
6. *Have you enquired about the ready police for regulating the conduct of election and if so have you made arrangements for the same.*
7. *Are you keeping the Diary for Election Duty for recording your conduct of election and related events?*

***AS ELECTORAL OFFICER:***

8. *Have you received 3 copies of the members list eligible to vote duly prepared by the society atleast ten clear days prior to the date of poll?*
9. *Have you verified and satisfied that the members list has been published by the society on the notice board at the office of the society at least 10 clear days prior to the date of poll?*
10. *If the society has failed to prepare the members list, have you prepared the voters list and published the same atleast 7 clear days before the date of poll?*
11. *Have you received any claim or objection to the voters' list published from any member, within the date specified in the election notice?*
12. *Have you considered the claims and objections raised and made necessary corrections to the voters list, if any?*

13. *Have you verified and satisfied that the corrections made by you have been published in the notice board of the society on or before the date specified in the election notice?*

***AS ELECTION OFFICER:***

14. *Have you got adequate number of Nomination Forms for distribution to the contesting candidates on demand?*
15. *Have you arranged to secure in time all polling materials including Ballot Boxes and paper seals required for the conduct of elections?*
16. *Have you arranged to get the required number of ballot papers atleast on the day prior to the date fixed for poll?*
17. *Do you have any need to appoint polling officers to assist you in the polling and if so, have made such appointments as provided under the rules?*
18. *Have you made any arrangement to ensure identification of voters to prevent impersonation?*
19. *Do you foresee any unrest or trouble in the place of election at the time of filling nominations or during the conduct of poll or counting of vote or during any process or process of election and if so whether police scrutiny and protection have been arranged;*
20. *Did you record the election results in a separate register as required?.*
21. *Did you publish the results of election as per rules?*
22. *Did you send all the statutory reports to the District Election Officer / State Election Officer / Election Commission as prescribed?*
23. *Did you place all the election records duly sealed and keep ready for handing over to the District Election Officer or the authorized person?*

## இணைப்பு - 8

## (பத்தி 8.2)

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை - 18**

**அனுப்புநர்:**

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்:**

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்,
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.

**ந.க. 1111 /2022/கூ.தே.5** **நாள் : 20.10.2022**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் –- மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பான தேர்தல் நடவடிக்கைகள் குறித்த மனுக்கள் மற்றும் புகார்கள் – வருங்காலங்களில் இம்மாதிரி புகார்களுக்கு இடம் தராது செயல்படுதல் – அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை :**

1. ஆணையத்தின் தேர்தல் திட்டம் ந.க.321/2018/கூதே1, நாள்: 05.03.2018.
2. ஆணையத்தின் கடிதம் எண் ந.க.825/2022/கூதே2 (3), நாள்: 29.08.2022.
3. ஆணையத்தின் கடிதம் எண் ந.க.1153/2020/கூதே3, நாள்: 26.09.2022.
4. ஆணையத்தின் கடிதம் எண் ந.க.897/2022/கூதே5, நாள்: 26.09.2022.

****

பார்வை (1) - ல் கண்ட ஆணையத்தின் தேர்தல் திட்டப்படி 2018 - ஒட்டு மொத்த தேர்தல்கள் 18,806 சங்கங்களுக்குத் திட்டமிடப்பட்டு 18,244 சங்கங்களுக்கு 2,24,649 இடங்களுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட தேர்தல் நடவடிக்கை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மாண்பமை மதுரை அமர்வு ஆகியவற்றின் முன்பாக 1706 ரிட்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவை தவிர மாண்பமை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக்குழுக்கள் முன்பாகவும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேலும் ஆணையத்தினால் நேரடியாக 5,544 புகார் மனுக்களும் பெறப்பட்டுள்ளன.

மாண்பமை உயர்நீதிமன்றங்களும், மண்டல குழுக்களும் புகார்களின் தன்மையை நன்கு பரிசீலித்து, பல இனங்களில் தேர்தல் அலுவலர்களின் தேர்தல் நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டனம் செய்தும், விமர்சித்தும், தேர்தலை ரத்து செய்தும், தேர்தல் அலுவலர்களின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், தீர்ப்பாணைகள் வழங்கியுள்ளன.

இவ்வகையில் 21 சங்கங்களுக்கான தேர்தல்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, மண்டலக்குழுக்கள் ஆகியவற்றாலும் 713 சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆணையத்தினாலும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இம்மாதிரியான நிலை மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் சிறப்பு மண்டலக்குழு முன்பான மனுக்கள், மற்றும் ஆணையத்தினால் நேரடியாகப் பெற்ற மனுக்களில் கூறப்பட்டுள்ள அனைத்து வகைப் புகார்களும் வகைப்படுத்தப்பட்டு இணைப்பில் தரப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் தொடர்பான பெரும்பாலான புகார்கள், சங்கங்கள் தங்களது உறுப்பினர் / வாக்காளர் பட்டியல்கள் சரிவரத் தயாரிப்பதை (Purification of Member list) பொறுப்பான அலுவலர்கள் உறுதி செய்வதினால் தவிர்க்கப்படும். இது தொடர்பாக பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் ஆணையத்தினால் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்று வேட்பு மனு பெறுதல் மற்றும் பரிசீலனை தொடர்பாகவும் ஆணையத்தால் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உண்மை நிலவரத்திற்கு மாறாக சட்ட ஒழுங்கினை காரணமாக காட்டி தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்துவது தொடர்பாக பார்வை (3)-ல் காணும் ஆணையத்தின் கடிதம் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இம்மாதிரியான புகார்கள் தொடர்வதை, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், விருப்பு வெறுப்பின்றியும், சட்டபூர்மாக நடத்த கடமைப்பட்ட ஆணையம், மிகவும் கவலையுடன் நோக்குகிறது.

தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய இம்மாதிரியான புகார்கள்இனியும் தொடராவண்ணம், தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆணையத்தின் இது தொடர்பான அனைத்து அறிவுரைகளையும் புறந்தள்ளி தங்களுக்குரிய சட்டபூர்வ கடமைகளிலிருந்து தவறும் அலுவலர்களை, ஆணையத்தின் சட்டபூர்வ கடமையை நிறைவேற்றுவதில் இடையூறு மற்றும் கேடு *(Vitiate)* விளைவிப்பவர்களாகவும், அதனைத் தடுப்பவர்களாகவும், ஆணையம் மற்றும் அரசின் நடவடிக்கைகளுக்கு களங்கம் விளைப்பவர்களாகவும் கருதி, தகுந்த ஒழுங்கு நடவடிக்கையினை பார்வை *(4)*-ல் கண்ட ஆணையத்தின் கடிதத்தில் தெரிவித்தபடி மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இந்த அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும் அதன் விபரத்தை *10.11.2022*-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**

**ஆணையர்**

**இணைப்பு** : மேற்கூறியவாறு

**நகல் :**

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
9. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
10. அலுவலக இருப்புக் கோப்பு 2022.c

**இணைப்பு**

**ந.க.1111/2022/கூ.தே.5 நாள் : 20.10.2022**

**தேர்தல் ஆணையத்தில் பெறப்பட்ட புகார்களின் தன்மைகள்**

***(Nature of Complaints)***

## *I.* உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் தொடர்புடையது :-

- உறுப்பினர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- வாக்காளர் பட்டியல் அலுவலர் வரவில்லை.
- உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை.
- போலியான மற்றும் தகுதியற்ற, உறுப்பினர்கள் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.
- கோருரிமை மற்றும் மறுப்புகள் பெறப்படவில்லை,
- இறுதி வாக்காளர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- உறுப்பினர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது.
- இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை.
- சங்க செயல் எல்லை *(area of operation)*யில் வசிக்காத / தொழில் செய்யாத / விவசாய நிலம் இல்லாத உறுப்பினர்கள் சங்கத்துணை விதிக்கு புறம்பாக உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.

## *II.* வேட்புமனு தாக்கல் தொடர்புடையது :-

- வேட்புமனு நடவடிக்கைக்கான தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பின்படியான நாளில் இடத்தில் நேரத்தில் இல்லை.
- வேட்புமனு படிவம் *(Form No.18)* தரமறுத்தல்.
- குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே வேட்பு மனு வழங்கப்படுதல்.
- தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற வகைகளில் உள்ள படிவம்-18ஐ ஏற்க மறுத்தல்.
- வேட்புமனு பெற மறுத்தல்.
- குறிப்பிட்ட நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்படுதல்.
- வேட்பு மனுத்தாக்கலுக்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை.
- வேட்புமனுதாக்கலுக்கு குறிப்பிட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.
- காவல்துறை பாதுகாப்பு போதுமான அளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.
- வீடியோ *(Video Coverage)* ஏற்பாடு இல்லை.

- வேட்பு மனு தாக்கலின் போது உண்மை நிலவரத்திற்கு மாறாக *(Contrary to facts and circumstances)* சட்ட ஒழுங்கினைக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல்.

***III.*** **வேட்புமனு பரிசீலனை தொடர்புடையது :-**

- அறிவிப்பின்படியான பரிசீலனைக்கான நாள், இடத்தில், நேரத்தில் தேர்தல் அலுவலர் இல்லை.
- வேட்புமனு தாக்கல் கையொப்பம் சரியில்லை, தொகுதி சரிவர நிரப்பப்படவில்லை, உறுதி மொழியினை அடிக்கவில்லை, வேட்புமனு சரிவர நிரப்பப்படவில்லை, உறுப்பினர் எண் சரியாக இல்லை மற்றும் இது போன்ற அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்படுதல்.
- வேட்பாளர்களுக்கு நிராகரிப்பதற்கான காரணங்கள் தெரிவிக்காமல் இருத்தல்.
- வேட்பாளர்களுக்கு அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு அதை சரியானதுதான் என்று அறிந்து கொள்ளும் வகையில் நியாயமான எவ்வித உதவியும் செய்யாமல் இருத்தல்.
- குறிப்பிட்ட நபர்களின் வேட்புமனுக்கள் மற்றும் அவை சரியாக இல்லாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படுதல்.
- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுதல்.
- தேர்தல் அலுவலர் சில வேட்பு மனுக்களில் தாங்களாகவே திருத்தம் மேற்கொண்டு அவற்றை நிராகரித்தல்.
- தேர்தல் அலுவலரால் படிவம் *20*-ல் வேட்பாளர் பட்டியல் முறையாக வெளியிடப்படாமல் இருத்தல்.

**ஒம்/-**
**ஆணையர்**

*********

வெளியீடு :
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்
273,அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை -600 018
அச்சிடப்பட்ட ஆண்டு 2023